# பாட்டாளி சிந்தனை

Volume 26 No. 6

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

February 2016

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3


### இன்றைய தருணத்தின் தேவை

## முழுமையான அழிவை எதிர்நோக்கியுள்ள கல்வியை கிளர்ந்தெழுந்து காப்போம்

இந்தியாவில் கல்வியானது புதிய கடுமையான தாக்குதல்களுக்கு ஆளாகியுள்ளது. சுதந்திரம் பெற்றது முதலே சாமானிய மக்களுக்கான கல்வி அதன் கருத்தாக்கத்திலும் அதை வழங்கும் முறையிலும் எப்படி தொடர்ச்சியான தாக்குதலுக்கு ஆளாகி வருகிறது என்பதை இதற்கு முன்னர் பல முறை எடுத்துக் காட்டியுள்ளோம். அனைவருக்கும் மதச்சார்பற்ற ஜனநாயகபூர்வ விஞ்ஞானபூர்வ கல்வி வழங்கவேண்டும் என்பதே நமது தேசத்தைக் கட்டி எழுப்பியவர்கள் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்களின் கனவாக இருந்தது. கல்வியைத் தடுப்பதற்கும், அதன் பாடத்திட்டங்களில் தீய மாற்றங்களைக் கொண்டுவருவதற்கும் அதன் தன்னாட்சி அதிகாரத்தில் தலையிடுவதற்கும் முயன்ற பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் முயற்சிகளை அவர்கள் அனைவரும் தங்கள் முழுபலத்தையும் பயன்படுத்தி எதிர்த்தனர்.

சுதந்திரத்திற்குப் பின்னர் சிறிதுகாலம் வரையில், மக்கள் கருத்தின் நிர்ப்பந்தத்தாலும், பெருமைமிக்க விடுதலைப் போராட்டத்தின் மிஞ்சியிருந்த தாக்கத்தின் விளைவாலும் ஆட்சி அதிகாரத்திற்கு புதிதாக வந்த இந்திய ஆளும் முதலாளித்துவ வர்க்கம் கல்வியை அரசாங்கத்தின் தரப்பில் வழங்கும் போக்கில் குறிப்பிடத்தக்க பெரிய தலையீடுகள் எதிலும் ஈடுபடவில்லை. ஆனால் அழுகிவரும் உலக முதலாளித்துவத்தின் பங்கும் பகுதியுமாக இருக்கும், ஏற்கனவே நெருக்கடியில் இருந்த இந்திய முதலாளித்துவப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று ஆளும் வர்க்கம் இருந்ததால் அவர்கள் இரண்டு வகையான அச்சத்தில் இருந்தனர்.

ஒன்று, நெருக்கடியில் சிக்கியிருக்கும் முதலாளித்துவ பொருளாதாரத்தில் வேலைவாய்ப்பு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகையில், கல்வியறிவு பெற்ற வேலைவாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கையை அனுமதிப்பது என்பது ஆட்சியாளர்களுக்கு அபாயகரமானதாகும். வேலைச் சந்தையில் இந்த வாய்ப்பு தொடர்ந்து சுருங்கி வருவதன் பின்னணியில் உள்ள காரணம் என்ன என்பதை கல்விகற்ற மனது எப்போதும் ஆராயத் தொடங்கும்.

இரண்டாவதாக, நெருக்கடி ஆழமாக செல்லும் போதும் அந்த நெருக்கடியின் சுமைகளை ஆளும் வர்க்கம் தொடர்ந்து சாமானிய மக்களின் தோள்களில் சுமத்தும் போதும், பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை மற்றும் இதர பிரச்சினைகளால் சாமானிய மக்களின் கோபம் அதிகரிக்கும். அந்த நேரத்தில் உழைக்கும் மக்களிடம் சரியான அரசியல் விழிப்புணர்வு உண்டாகி விட்டால், அவர்களது அதிருப்தியும் கோபமும் சரியான திசைவழிக்குச் சென்று, அது இந்த சுரண்டல் முதலாளித்துவத்தின் இருத்தலுக்கே அச்சுறுத்தலை ஏற்படுத்திவிடும். அத்தகைய ஒரு அரசியல் விழிப்புணர்வை மக்கள் பெறுவதற்கு நிச்சயமாக கல்வி ஒரு வாகனமாக உதவும். ஆக ஆளும் வர்க்கத்தின் தேவைக்காகத்தான் கல்வியை அனைத்து வழிகளிலும் ஆள்பவர்கள் தாக்கத் தொடங்கினர்.

#### உயர்கல்வி மீது முதல் தாக்குதல்

உயர்கல்வியில்தான் அவர்களது கோடாரி முதலில் பாய்ந்தது. ‘படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்காக உயர்கல்வியை நாங்கள் கட்டுப்படுத்த விரும்புகிறோம்’ என்று யுஜிசியின் முதல் தலைவர் வெளிப்படையாகவே தெரிவித்தார். ஆக இப்படி வெளிப்படையாகவே அறிவித்து இதை நிறைவேற்றுவதற்காக அன்றைய காங்கிரஸ்–தலைமையிலான அரசாங்கம் உயர்கல்வியில் இடங்களுக்கான எண்ணிக்கைக்கு வரம்பு விதித்தது. கல்வியின் விலையை படிப்படியாக அதிகரிப்பது என்ற திட்டம் துவங்கப்பட்டது. மனிதனை மனிதனாக்கும், குணாம்சத்தைக் கட்டியெழுப்பும், பகுத்தறிவு எண்ணத்தை உருவாக்கும் கல்வியின் சாராம்சத்தை அழிப்பதற்கும் கல்வியின் கருத்துக்களை நீர்த்துப் போகச் செய்வதற்குமான முதல் படியாக, ஆளும் முதலாளித்துவ வர்க்கம் நயவஞ்சகமாக பாடத்திட்டங்களை திருத்தினர், பகுத்தறிவு மற்றும் போராட்டத்திற்குப் பதிலாக குருட்டுத்தனமான நம்பிக்கையையும் விதிபடி நடக்கவேண்டும் என்றும் முன் நிறுத்தினர்.

தொடர்ச்சி 5ம் பக்கம்

### மத்திய கிழக்கு உள்ளிட்ட அரபு நாடுகள் பற்றியெறியும் விஷயத்தில்

## மத்திய கிழக்கு பகுதியில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் செயல்பாடுகள்

கடந்த நவம்பர் 13ஆம் தேதியன்று ஒரு பயங்கரவாத நடவடிக்கையால் பாரிஸ் நகரம் மட்டுமின்றி உலகமே அதிர்ச்சிக்குள்ளாகியது. அமெரிக்க ஆடல் பாடல் நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்த ஒரு திரையரங்கு, மூன்று உணவு விடுதிகள், ஒரு மது பானக்கடை மற்றும் ஒரு மைதானம் ஆகியவற்றில் ஒரே நேரத்தில் நிகழ்ந்த ஏ கே 47 துப்பாக்கி சூடு மற்றும் குண்டு வீச்சுக்கு நூற்றுக்கும் அதிகமான அப்பாவி மக்கள் இரையாகினர். இத்தகைய பயங்கரவாத நடவடிக்கை உலகில் அல்லது பிரான்ஸ் நாட்டில் மட்டும் புதிதாய் ஒன்றும் நிகழ்ந்துவிடவில்லை. அமைதியான, கலையை நேசிக்கும் மாபெரும் கலைநயமிக்க இத்தலைநகரில் புதிதாய் நிகழ்ந்த ஒன்றெனெ கூறப்பட்ட இப்பயங்கர நிகழ்வுக்கு முன்பும் பின்பும் தொடர்ந்து பல கொடூரமான பயங்கரவாத செயல்கள் ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன.

எகிப்து நாட்டில் ரஷ்ய பயணிகள் விமானத்தில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டு வெடித்துச்சிதறியது, லெபனானின் பெய்ரூட்டில் நிகழ்ந்த இனப்படுகொலை, துனிஷ்யாவில், நைஜீரியாவில், மாலி மற்றும் இன்னும் பிற நாடுகளில் நடந்த படுகொலைகள் போன்றவை உலகத்தில் நிகழ்ந்துள்ளன. பாரிஸ் சம்பவத்தின் பின்விளைவுகள் மேலும் மாறுபட்டு பரந்த அளவில் தீவிரமாய் இருந்த போதிலும், ஒருவிதத்தில் இது பயங்கரத்தில் ஒன்றும் குறைந்ததல்ல. இந்நிகழ்வுக்கு ஐஎஸ்ஐஎஸ் பொறுப்பேற்றிருக்கின்றது. அதன் கொலையாளிகளில் சிலர் கொல்லப்பட்டனர், சிலர் கைது செய்யப்பட்டனர் மற்றும் சிலர் தற்கொலை செய்துகொண்டதாக அறிவிக்கப்பட்டனர். குறிப்பாக ஐரோப்பா கண்டம் முழுவதிலும் குழப்பம் மற்றும் பயம் என்ற வடிவத்தில் ஓர் அதிர்ச்சியலை பரவியது. இத்தாக்குதலானது பிற நாடுகளின் ஆட்சியாளர்கள் சிரியாவிலிருந்து விரட்டப்பட்ட குடியேறிகளுக்கு (மைக்ரண்ட்) புதிய தடைகளை விதித்திட ஓர் வாய்ப்பினை வழங்கியது. இன்னும் பல்வேறு நாடுகளின் ஆட்சியாளர்கள் இதனைக் காரணமாகக் காண்பித்து மக்களின் ஜனநாயக உரிமைகளை பறித்துவிட்டனர்.

வழக்கமான கடும் நடவடிக்கைகள் மற்றும் தீவிர பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஊடகங்கள் இச்செய்தி எங்கெங்கோ கொண்டு சென்றன. பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி அவர்கள், ‘இஸ்லாமிய நாட்டினை அழித்தொழிப்பேன்’ என சூளுரைத்தார். ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு ஈராக் மற்றும் சிரியா நாட்டுக்குள்ளேயே கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதென பாரிஸ் தாக்குதலுக்கு முதல் நாள் கூறிய அமெரிக்க ஜனாதிபதி அவர்கள் தனது வார்த்தையில் பின்வாங்கி, துருக்கியில் நடந்த ஜி20 மாநாட்டிற்குப் பின்பு இறுதியாக ஐஎஸ்ஐஎஸ் அமைப்பை முற்றிலும் ஒழித்துக் கட்டுவேன் என தட்டுத்தடுமாறிப் பேச வேண்டியதாயிற்று. நவம்பர் 15ல் நடந்த ஜி20 மாநாட்டிலேயே ஐஎஸ்ஐஎஸ்–ஐ வெளியேற்றுவதற்கான முயற்சியை இருமடங்காக்குவேன் என உறுதியேற்றார்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அகற்றிட விரும்பிய சிரியா ஜனாதிபதி பஷார்–அல்–ஆஸாத்திற்கு ஆதரவாக செப்டம்பர் 30ஆம் தேதியன்று பாரிஸ் தாக்குதலுக்கு முன்பே ரஷ்யாவானது சிரியாவில் ஐஎஸ்ஐஎஸ் அமைப்பிற்கெதிராக தனது குண்டுவீச்சு தாக்குதலை துவங்கிவிட்டது. கடந்த அக்டோபர் மாதம் எகிப்து நாட்டின் மேல் பறந்த ரஷ்ய பயணிகள் ஜெட் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு அதில் 224 பேர் கொல்லப்பட்டதற்கு ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு பொறுப்பேற்றபின் ரஷ்யா தனது தாக்குதலை அதிகரித்திட உறுதி பூண்டது. ஆனால் தனது ஆதரவு கிளர்ச்சியாளர்களின் தளங்கள் மீது குண்டுவீசி தாக்கியதாக ரஷ்யா மீது குற்றம் சாட்டியது.

பாரிஸ் சம்பவத்திற்குப்பின் மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆஸாத்தின் எதிர்காலத்தை முன்னிட்டு, ஐஎஸ்ஐஎஸ் அமைப்பிற்கு எதிரான ஓர் உண்மையான சர்வதேச கூட்டினை விரும்பினால், அரசியல் ரீதியில் ஆஸாத்தை வெளியேற்றுவது பற்றிய கோரிக்கையினை கைவிடுமாறு மேற்கத்திய

தொடர்ச்சி 2ம் பக்கம்

# மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏகாதிபத்திய சதி – மூர்க்கத்தனமான வன்முறை, சுரண்டல், படுகொலை போன்ற திட்டங்கள்

1ம் பக்கத் தொடர்ச்சி

நாடுகளுக்கு ரஷ்யா ஆலோசனை கூறியது. இதன் பின்னர், அமெரிக்க ஜனாதிபதி இத்தனை காலமாக சிரியாவின் ஜனாதிபதியை ஆட்சிக்கட்டிலில் நீடித்து வைத்திருக்க ரஷ்யா முயற்சித்து வருகிறதென குற்றம் சாட்டி வந்த அமெரிக்க ஜனாதிபதி அவர்கள் தனது கருத்தை மாற்றிக்கொண்டு ரஷ்ய ஜனாதிபதியை ஓர் 'ஆக்கபூர்வமான கூட்டாளி' என புகழ்ந்தார். அனைத்துமே வெளிப்படையாக அப்போதைய நெருக்கடிக்கு உட்பட்டும் ராஜாங்க உறவு சம்பிரதாயத்தின் அடிப்படையிலும் நடந்து கொண்டிருந்தது.

முதன் முறையாக இரண்டாம் உலகப் போருக்குப்பின், அமெரிக்காவின் நட்பு நாடான ரஷ்யாவும் பிரான்ஸூம் கைகோர்த்து சிரியாவில் ஐஎஸ்ஐஎஸ்ஸின் கொத்தளமான 'ரக்கா' மீது தாக்குதல் தொடுத்து ஒன்றுபட்ட ராணுவ மேடை அமைத்திடும் தன் ஆவலை வெளிப்படுத்தின. அமெரிக்காவும் அதனைத்தொடர்ந்து பிரிட்டனும் இவ்விஷயத்தில் தத்தம் நாட்டு பாராளுமன்றத்தில் மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்தது. மேலும் அந்நாடுகள், ஜிகாதிஸ்டுகள் சிரியாவை கைப்பற்றி விட்டனர் என்று கூறி ஐஎஸ்ஐஎஸ்–க்கு சொந்தமான எண்ணெய்க் கிணறுகள் மீது தனது தாக்குதலை முடுக்கிவிட்டன. அப்பட்டமாகவே சிரிய மக்கள் இரு முனை பேரழிவை எதிர்கொண்டனர். ஒருபுறம் ஜிகாதிஸ்டுகள் சிரியாவின் ஆதாரங்களை கைப்பற்றும் போக்கில் மக்களை கொல்கின்றனர். மறுபுறம் உலக சக்திகள் ஜிகாதிஸ்டுகளை தாக்கி சிரியாவின் வளங்களை அழித்தொழிக்கின்றனர்.

அதே சமயம் அமெரிக்க தலைமையிலான நேட்டோ அமைப்பின் உறுப்பு நாடான துருக்கி, மீண்டும் மீண்டும் எச்சரித்தும் தனது வான்வெளி எல்லையில் ஊடுருவியதாக ரஷ்ய ஜெட் விமானத்தை சுட்டு வீழ்த்தியதில் ஒரு ரஷ்ய விமானி கொல்லப்பட்டார். ரஷ்ய அதிகாரிகள் வான்வெளி அத்துமீறல் ஏதுமில்லையென மறுத்து, துருக்கியின் செயல் "ஓர் திட்டமிட்ட தூண்டுதல்" என அறிவித்தனர். மேலும் "சுட்டு வீழ்த்தப்பட்ட ரஷ்ய ஜெட் போர் விமானத்தின் வான்வழிப் பாதையை துருக்கி அதிகாரிகளுக்கு காட்டிக் கொடுத்தனர்" என ஐஎஸ்ஐஎஸ்–க்கு எதிரான கூட்டணியின் தலைவனான அமெரிக்காவை அது குற்றம் சாட்டியது. எதிர்வினையாக ரஷ்யா துருக்கி மீது வணிகத் தடையை விதித்தது. இதனால் துருக்கி கடுஞ்சினம் கொண்டது. பெரிதும் விளம்பரப் படுத்தப்படும் ஜி20 மாநாட்டின்போது ஜி20 நாடுகள் சில உள்ளிட்ட 40 நாடுகள் ஐஎஸ்ஐஎஸ்–க்கு நிதியுதவி அளித்து வருகின்றனதென ரஷ்யாவே குற்றம் சாட்டியது.

ஒட்டுமொத்த உலக சூழலும், குறிப்பாக வட ஆப்பிரிக்காவின் பகுதிகள் உள்ளிட்ட ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வெடிமருந்துப் பொருட்கள் மற்றும் ராணுவ தடவாளங்களின் துர்நாற்றம், கொலைகள், குழப்பங்கள், ரகசிய மற்றும் அப்பட்டமான ராணுவ அரசியல் போக்குகள் காணப்பட்டன. சுருங்கக்கூறினால், பத்திரிகையாளர்களுடன் உலகமே வியப்பிலாழ்ந்து, அதற்கான விடை மற்றும் தீர்வுக்கான வழியினை தேடியலைந்தது. இதில் மக்கள் மட்டுமே பலியானார்கள். பயங்கர பொருளாதாரப் பின்னடைவு, வேலையின்மை, சந்தை நெருக்கடி மற்றும் சிதறுண்ட சமூக வாழ்க்கையினால் தட்டுத்தடுமாறியிருக்கும் மக்களும் அல்லது பல்வேறு நாடுகளில் மறுத்து விரட்டியடிக்கப்பட்டு பாரிசில், சிரியாவில், அல்லது ஈராக்கில் மற்றும் ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் நிலைகுலைந்து போன சிரியா அகதிகளும்தான் இதற்குப்பலியானார்கள்.

மேற்கண்ட உண்மைகள் அவர்களது அரசியல் முக்கியத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது. அவைகளை தீர்மானிக்கும் முன்னர், அதற்கு மேலும் சில உண்மைகள் தேவைப்படலாம். வெளிப்படையாகவே உலகம் கண்ணுற்ற தீவிரவாத அமைப்புகளில் மிகவும் பயங்கரமான ஒன்றான ஐஎஸ்ஐஎஸ் ஒருபுறம் முன்னிலை வகிக்கின்றது. மற்றொரு புறம் நேட்டோ அமைப்பின் கூட்டாளிகளுடன் சேர்ந்து அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகள். இவர்களுடன் சோவியத் யூனியனில் நடந்த எதிர்ப்புரட்சியினால் ஏகாதிபத்திய சக்தியாக உருவான ரஷ்யாவும் இணைந்துகொண்டது.

பிரதான விஷயத்தை முதலில் பார்ப்போம். யார் இந்த ஐஎஸ்ஐஎஸ் அமைப்பினர்? ஜிகாதிஸ்டுகள் அல்லது கொலைபாதக மத அடிப்படைவாதிகளை எப்படிப்பார்க்கின்றீர்கள் என்பது முக்கியமல்ல. இவ்வமைப்புகள் எவ்வாறு உருவாகின என்பதில் சர்ச்சையேதுமில்லை. 2015, மார்ச் மாதம் நடந்த ஓர் பேட்டியில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அவர்கள் விமர்சகர்களை சமாதானப் படுத்துவதற்காக இருந்தாலும், வெளிப்படையாகவே "ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு ஈராக்கின் அல்–கொய்தாவிலிருந்து நேரடியாக உருவான ஒன்று எனவும், அது எங்களது ஆக்கிரமிப்பால் வளரப் பெற்றது" எனவும் ஒப்புக்கொண்டார். சிஎன்என் எனும் ஓர் ஊடகத்திற்கு அளித்த மற்றுமொரு பேட்டியில் முந்நாள் பிரிட்டிஷ் பிரதமரும் ஈராக் ஆக்கிரமிப்பின்போது ஜார்ஜ் புஷின் தீவிர ஆதரவாளருமான டோனி பிளேர் அவர்கள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவைப்போலவே அதே உள்நோக்கத்துடன் "ஈராக் போர் இல்லையெனில் இஸ்லாமிய அரசு இருக்காது" என குறிப்பிட்டார். உண்மையில் அந்நாட்டின் எண்ணெய் மற்றும் பிற வளங்களை சுரண்டும் உள்நோக்கத்துடன் சதாம் ஹுசேன் பேரழிவு ஆயுதங்கள் வைத்திருந்தாரென தாக்குதல் நடத்தப்பட்ட, பின்னர் அது பொய்யென நிரூபிக்கப்பட்ட ஈராக் போரை நினைவுபடுத்திப்பாருங்கள்!

ஏகாதிபத்தியவாதிய தலைவர்களின் கூற்றுக்களில் பாதி உண்மைதான் வெளிப்பட்டிருக்கின்றது. உண்மையில் "ஏகாதிபத்திய கால கட்டத்தில் இவ்வுலகில் போர் தவிர்க்கவியலாதது, ஏனெனில் நெருக்கடியிலிருக்கும் காலாவதியாகிப்போன தனது பொருளாதாரத்தை நிலைநிறுத்திட வேண்டி, ஏகாதிபத்தியம் போரினால்தான் உயிர் வாழ்கின்றது" என்ற மாபெரும் பாட்டாளி வர்க்க தலைவர் லெனின் உயர்த்திப்பிடித்த மறுக்கவியலா உண்மையினை பல ஆண்டுகளாக உலகின் இப்பகுதி மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கின்றது.

ஒவ்வொரு நாட்டையும் ஏகாதிபத்திய சதித்திட்டம், கொள்ளை, அபகரிப்பின் வேட்டைக்காடாக மாற்றிய பின் யு எஸ் தலைமையிலான ஏகாதிபத்திய திமிங்கிலங்கள் 1980களின் பிற்பகுதியில் சோசலிச முகாமின் வீழ்ச்சிக்குப் பிறகு மத்திய கிழக்கு, மேற்காசியா பக்கம் மீண்டும் திரும்பியது. இப்பகுதியில் மிகுந்திருக்கும் இயற்கை வளங்கள் மீது, குறிப்பாக எண்ணெய் மற்றும் எரிவாயு மற்றும் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா, ரஷ்யா, பிற முந்தைய சோவியத் நாடுகள், சீனா ஆகிய நாடுகளுக்கு மத்தியில் அமைந்திருக்கும் ஒரு கேந்திரமான பகுதியில் அரசியல் சார்ந்த இப்பகுதியில் தங்கள் கண்களை வைத்திருப்பது வெளிப்படையான ஒன்று. அமெரிக்காவின் வழக்கமான திட்டங்கள் அனைத்துமே இப்பகுதியில் மேலும் வெளிப்படையானவைதான்.

பிற நாடுகளின் இறையான்மை மீது எவ்வித அக்கறையும் காட்டாமல் சிறிய மற்றும் பலவீனமான நாடுகளில் தந்திரமாகவும் நயவஞ்சகமாகவும் நுழைவது மற்றும் அனைத்து சர்வதேச நியதிகளையும் காலில் போட்டு மிதித்து நேரடியாக வன்முறை ராணுவ தலையீடு செய்வதன் மூலம் அந்நாடுகளின் தனக்கு அடிபணியாத ஆட்சியாளர்களை அகற்றிடுவது (உதாரணமாக, சதாம் ஹுசேன், கடாபி, மிலொசெவிச், ஆசாத்–இதில் இன்னும் வெற்றி கிட்டவில்லை மற்றும் இன்னும் பிற) ; பின்பு ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக வெகுண்டெழும் மக்களின் ஒற்றுமையை சிதறடிக்கும் நோக்கத்துடன் அந்நாடுகளில் இனவாத, மதவாத இன்னும் அனைத்து வகை பிரிவினைவாத வித்துக்களை தூபமிட்டு வளர்ப்பது; இத்தகைய பின்னணியில்தான் மத்திய கிழக்குப்பகுதியில் ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு உருவாகி தலைதூக்கியது. மேலும் ஒரு நாட்டின் பள்ளிகள், மருத்துவமனைகள், கட்டுமான வசதிகள் ஆகியவற்றை அழித்து அதனை முதுகொடியச் செய்து ஆக்கிரமிப்பாளர்கள் அங்கு தமது சொந்த 'ஜனநாயகத்தை' நிறுவுவர்.

ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு தீவிரமாக செயல்பட்ட ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டம் ஒன்றுதான். ஒரு நாட்டிலிருந்து பெற்ற அனுபவத்தின் வாயிலாக மற்றொரு நாட்டில் தங்களது தேவையினை பூர்த்தி செய்து கொள்ள அவர்கள் தந்திரோயுபாயங்களை மாற்றி மெருகூட்டிக்கொண்டனர். இதனால்தான் ஈராக் மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் காணப்படும் காட்சிகளில் சில வேறுபாடுகள் உள்ளன.

ஈராக் நாடு பேரழிவு ஆயுதங்கள் வைத்திருப்பதாக ஓர் பொய்யான குற்றச்சாட்டினை முன்வைத்து அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் சதாம் ஹுசேனை பதவியிலிருந்து அகற்றி தூக்கிலிட்டுக்கொன்றனர். பின் தங்களுக்கு வளைந்து கொடுக்கும் ஷியா ஆதிக்க அரசாங்கத்தை ஈராக்கில் நிறுவினர். அதே நேரத்தில் சன்னி–ஷியா பிரிவினரிடையே பிளவினை தூபமிட்டு வளர்த்து ஈராக் அரசாங்கத்தை பயன்படுத்தி சன்னி பிரிவினரை ஓரங்கட்டி நசுக்கினர். அதன் மூலம் ஈராக் அரசு சதாம் ஹுசேன் மற்றும் பாத் கட்சியினால் வெற்றிகரமாக ஆட்சி செய்யப்பட்டு மத்திய கிழக்கு பகுதியில் சற்று வழக்கத்திற்கு மாறாக இருந்த மதசார்பற்ற கட்டமைப்பை அழித்தொழித்தனர்.

அழித்தொழித்து சேதப்படுத்திய பின்பும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் அமெரிக்க வீரர்களினால் போர்ப்பரிசாக ஈராக்கிலுள்ள மெசோபடேமியா மற்றும் இன்னும் பிற நாகரிகத்தின் விலைமதிப்பற்ற பழங்காலச் சின்னங்களின் பொக்கிஷங்கள் உள்ளிட்டவைகளை கொள்ளையடித்து நாட்டை சின்னாபின்னமாக்கினர். ஈராக்கிய மக்களிடையே காணப்பட்ட வளர்ந்துவரும் வெறுப்புணர்வுக்கு மத்தியில் சன்னி பிரிவினர் மேலாதிக்கம் செலுத்தும் மத அடிப்படைவாத ஈராக்கிய இஸ்லாமிய அரசு என்ற அமைப்பை (ISI) துவக்கயிருக்க ஓர் வித்தினையிட்டது.

அமெரிக்க ஜனாதிபதிக்கே பொருத்தமான வகையில் ஒபாமா அவர்கள் மேற்கண்ட அதே பேட்டியில் "எங்கு வளரும் ஒரு இளைஞருக்கு கல்வியில்லையோ எதிர்காலமில்லையோ அங்கு அவர் தன்னை சுற்றிப் பார்க்கையில் ஒரு வழியில் தனக்கு நியாயமும் சக்தியும் மதிப்பும் கிடைக்க தான் ஒரு போராளியாக இருக்க வேண்டுமென்றிருந்தால் அதை செய்வதற்கு ஒரு மதவாத நியாயம் கற்பிக்கப்படுமென்றால் அவர் ஐஎஸ்ஐஎஸ் போன்ற அமைப்பில் இணைவார்."

அண்டை நாடான சிரியாவில் ஆஸாத்தை பதவியிறக்கம் செய்திட முடியாமல் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தோற்றாலும் பல பொதுவான அம்சங்களுடன் அவர்கள் மீண்டும் இதே காட்சியை அரங்கேற்றினர். மத்திய கிழக்குப்பகுதியில் ஐஎஸ்ஐஎஸ் அமைப்பிற்கு ஆட்கள் மற்றும் பொருட்களுக்கான ஆதாரங்களை வழங்குகிற, கிளர்ச்சிக்காரர்கள் என்றழைக்கப்பட்ட ஃப்ரீ சிரியன் ஆர்மியினால், ஆயுதப்பயிற்சி, பண பல உதவிகளை ஏற்பாடுசெய்தல் போன்றவற்றிற்காக பிற்போக்குவாத கூட்டாளியான சவுதி அரேபியா, கத்தார் மற்றும் இன்னும் பிற நாடுகளிடமிருந்து போதுமான உதவிகள் பெற்றதன்பின்னரே வெற்றி பெற முடிந்தது. ஈராக்கின் அல் கொய்தாவின் உரிமை பெற்ற அமைப்பாக துவங்கி இரண்டாவது 'எஸ்' தான் சிரியாவை உள்ளடக்கிய ஐஎஸ்ஐஎஸ் அமைப்பாக இஸ்லாமிய அரசு அல்லது ஐஎஸ் அல்லது ஐஎஸ்ஐஎஸ் என்ற பெயருடன் உருவானது. பெயர் மாற்றம் மட்டுமின்றி ஐஎஸ்ஐஎஸ் அதன் துவக்கத்திலிருந்தே ஆஸாத்திற்கு எதிரான எஃப்எஸ்ஏ எனும் அமெரிக்க ஆதரவு எதிர்ப் புரட்சி அமைப்புடன் இணைந்தேயிருந்தது.

மத்திய கிழக்கு நாடுகளில் சிரியாவானது ஒப்பீட்டளவில் மத சார்பின்மை கோட்பாடு அம்சங்களை கொண்டிருந்த மற்றுமொரு நாடாகும். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் பிரான்ஸ் உள்பட அதன் கூட்டாளிகளும் அந்நாட்டில் லட்சக்கணக்கானோர் மடிவதற்கும், அந்நாட்டின் ஒரு பகுதியை முடமாக்கிடவும் காரணமாயிருந்தனர். அவர்கள் சிரியாவிலும் தங்களது பரவலை ஏற்படுத்திட இஸ்லாமிய அரசுக்கான (ஐஎஸ்) விரிவான களத்தினை உருவாக்கி மதசார்பின்மையின் எச்சங்களை வெற்றிகரமாக எளிதில் அழித்தொழித்தனர்.

தொடர்ச்சி 3ம் பக்கம்

# யு எஸ் ஏகாதிபத்தியம் பயங்கரவாதத்தை உருவாக்கி அதற்கு தூபம் போட்டு அதைவிட பெரிய அரசு பயங்கரவாதத்தை உருவாக்கின்றது

2ம் பக்கத் தொடர்ச்சி

மேற்கூறியன யாவும் ஈராக் மற்றும் சிரியாவில் ஐஎஸ்ஐஎஸ் உருவாக்கத்தின் பின்னணியில் என்ன நடந்ததென்பதற்கான சுருக்கமாகும். ஆனால் இன்னும் சில விஷயங்கள் உள்ளன. ஆஸாத்திற்கு எதிராக ஐஎஸ்ஐஎஸ் அமைப்பினை பயன்படுத்தி அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள், அவர்களது கூட்டாளிகள் மற்றும் அவர்களுடன் இணைந்திருந்தவர்கள் தங்கள் வழக்கப்படி இத்தகைய மத அடிப்படைவாதிகளை வைத்து விளையாடினர். அவர்களது போர்த்தளவாட வியாபாரிகள் ஆயுதங்களை வழங்கினார்கள். அவர்களது கூட்டாளிகள் அனைத்துவகை உதவி களையும் தந்தார்கள். சில மாதங்களுக்குப்பின்னர், குடியேறிகள் பிரச்சினை உலகை உலுக்கியபோது அமெரிக்க ஆதரவு அரபு எதேச்சையாளர்களான சவுதி அரேபியா, கத்தார், ஐக்கிய அரபு அரசர் களான மற்றும் பிற வளைகுடா நாடுகள் அனைத் தும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்ஸின் தத்துவார்த்த நண்பர்கள் எனவும் அவர்கள் தாராளமாக பணம் மற்றும் ஆயுத உதவிகள் செய்துவருவதாக நாங்கள் குறிப்பிட்டிருந்தோம்.

உதாரணமாக, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கத்தார் மற்றும் துருக்கி ஆகியன நூற்றுக்கணக்கான கோடி டாலர்களை ஐஎஸ்ஐஎஸ் ஆக உருமாறிய சிரியாவின் இஸ்லாமிய கிளர்ச்சியாளர்களுக்கு வாரியிறைத்தனவென்றும் அமெரிக்க உதவி ஜனாதிபதியான ஜான் பிடென் அவர்கள் கடந்த வருடம் ஒப்புக்கொண்டார். அமெரிக்கா ஐஎஸ்ஐஎஸ்-க்கு உதவியளிக்கிறது என்பதற்கான சாட்சிகளும் ஆதாரங்களும் உள்ள தென ஊடகங்களிலும் வெளிவந்திருக்கின்றன. 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஈராக்கின் பாராளுமன்ற பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு கமிஷனின் எம்பி மஜித்-அல்-கராவி அவர்கள், கிடைக்கப்பெற்றிருக்கின்ற தகவல்களின்படி அமெரிக்க விமானங்கள் ஐஎஸ்ஐஎஸ்-க்கு ராணுவ தளவாடங்கள் வழங்கிக்கொண்டிருக் கின்றதென்பதை சுட்டிக்காண்பிக்கின்றன என கூறியுள்ளார்.

அமெரிக்க அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட ஓர் ரகசிய ஆவணத்தை ஜூடிஷியல் வாட்ச் எனும் பொதுநல சட்ட நிறுவனம் பெற்றது. மேற் கத்திய அரசாங்கங்கள் ஐஎஸ்ஐஎஸ் போன்ற சக்திகள் உருவாகிட வழிவகுக்கும் என எதிர் பார்த்து தெரிந்துகொண்டு வேண்டுமென்றே சிரியாவின் ஜனாதிபதி ஆஸாத்தை கவிழ்த்திட அல்-கொய்தா மற்றும் பிற இஸ்லாமிய தீவிரவாத குழுக்களுடன் கூட்டு சேர்ந்துகொண்டது எனக் கூறுகின்றது. பென்டகன் இந்த அணுகுமுறை யினால் "இஸ்லாமிய அரசு" அமைந்திட வாய்ப் பிருக்கிறதென முன்கூட்டியே அறிந்திருக்கிற தெனவும் அது "சிரிய ஆட்சியை தனிமைப்படுத்திட" தந்திரோபாயமானதோர் வாய்ப்பு என விவரித்தது, மேலும் அந்த ஆவணம் கூறுகிறது.

இவ்வாறாக அமெரிக்கா தலைமையிலான கூட்டணி தற்போது ஐஎஸ்ஐஎஸ்-ஐ எதிர்த்து போராடுவதாக கருதினாலும், மூன்று வருடங் களுக்கு முன்பு இப்பகுதியில் ஆஸாத் அரசாங் கத்தை பலவீனப்படுத்திட "சலஃபிஸ்ட் பிரின்ஸ் பாலிட்டி" எனும் தீவிரவாத அமைப்பு உருவா வதை வரவேற்றது என்று கூறும் அந்த ஆவணம் பிரத்தியேகமாக இதனை உறுதிசெய்கின்றது. இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் மொசே யா ஆலனும் கூட அமெரிக்க ஆதரவு சிரியா கிளர்ச்சி யாளர்களுக்கு இஸ்ரேல் உதவியளிக்கின்றது எனக் கூறி இதனை மேலும் உறுதி செய்துள்ளார். ஊடகங்களில் வெளிவந்த மற்றுமொரு செய்தி யானது, ஐரோப்பிய கண்டத்தின் மிகப்பெரும் சக்திகளான ஜெர்மனி போன்றவை இடைத்தரகர் கள் மற்றும் அவர்களிடம் ஆயுதங்கள் வாங்கும் அரபு நாடுகள் வழியாக ஐஎஸ்ஐஎஸ்-க்கு ஆயுத விற்பனை செய்திடுவதாக தனது சந்தேகத்தை வெளியிட்டது.

இதற்கு மாறாக, வேறெதுவும் நடந்திருக்க முடி யாது. ஐஎஸ்ஐஎஸ்-க்கு ராணுவ தொழிற்சாலை கள் ஏதும் கிடையாது. அதற்கு நிரந்தரமானதோர் எல்லையும் கிடையாது. ஏகாதிபத்திய ஆயுத வியாபாரிகள் இவர்களுக்கு வழங்கியிருக்காவிடில் இவர்களிடம் நுட்பத்திறன் வாய்ந்த பல்வேறு ஆயுதங்கள் எங்ஙனம் இருக்க முடியும்? அவர்கள் கைப்பற்றிய எண்ணெய்க்கிணறுகளிலிருந்து எண்ணெய் விற்பதனால் கிடைக்கப்பெற்ற பணத்தைக்கொண்டும் அவர்கள் ஆயுதங்களை வாங்கிக்கொண்டிருக்கின்றனர். ஐஎஸ்ஐஎஸ் என்ற அசுரர் பிணைக்கைதிகளை தலை துண்டிப்பு செய்தது மற்றும் இறுதியாக பாரிஸ் படுகொலையை நிகழ்த்தியது வரையில் அங்கீகரிக்கப்படவில்லை.

இப்போது ஐஎஸ்ஐஎஸ் பாரிஸ் படுக் கொலையை நிகழ்த்திய பின்னர், இதே அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஐஎஸ்ஐஎஸ் கைப்பற்றி யிருக்கும் எண்ணெய் வயல்கள் மீது குண்டு வீச்சு நிகழ்த்துகின்றனர். இதே சவுதி மன்னர் தீவிர வாதத்திற்கெதிரான போருக்கு 110 மில்லியன் டாலர்கள் நன்கொடை தந்திருக்கின்றார். என்னே உதவி மனப்பான்மை! என்னே இரக்க மனம்! என்னே வேடதாரித்தனம்!

இப்போதும்கூட ஐஎஸ்ஐஎஸ் அமைப்பினை ஒரு தீய சக்தியென அமெரிக்க ஆட்சியாளர்கள் உண்மையில் கருதுவார்கள் என வாய்ப்பிருக் கின்றதா? என ஒருவர் வியப்படையலாம்! தங்களது நாட்டிற்குள்ளும், உலகம் முழுவதும் மக்களது கருத்து ஐஎஸ்ஐஎஸ்-க்கு எதிராக இருப் பதனால் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளி களுக்கு இவ்வாறு செய்ய ஒரு உந்துதலாக இருந்திருக்கலாம்.

அப்படியேயிருக்கட்டும்! சில உண்மைகள் இதனை இன்னும் உறுதி செய்கின்றன. முதலா வதாக, தீவிரவாதத்தை தூண்டிவிடுபவர்கள் இருவருமே ஒன்றாக இணைந்து நிற்கின்றனர். ஒருபுறம் வெறிபிடித்த மத அடிப்படைவாத ஐஎஸ்ஐஎஸ் உருவாக்கப்பட்டு அமெரிக்காவால் சின்னாபின்னமாக்கப்பட்ட நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மற்றொருபுறம் போர்வெறித் திட்டத்தை கட்டியமைக்கும் அமெரிக்க ஏகாதி பத்தியவாதிகள் சோசலிச முகாமின் வீழ்ச்சிக்குப் பின்பு ஒவ்வொரு நாடாக அரசு தீவிரவாதத்தை நிகழ்த்தி வருகின்றனர். ஒன்று, ஏகாதிபத்தியவாதி களால், அவர்களது போரின் திட்டமிட்ட விளைவாக ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு உருவாக்கப்பட்டது. மற்றொன்று, மத ரீதியில் மக்களிடம் பிரி வினையை ஏற்படுத்தி, தூண்டிவிட்டு பிரித்தாளும் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டத்தை அவர்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

தற்போது நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே ஏகாதிபத்தியவாதிகள் அவர்கள் மீது கடுமையாக செயல்படுகின்றனர். இதனை சாக்காகக்கொண்டு அவர்கள் தாங்கள் தாக்குதல் தொடுக்கும் நாட்டி லுள்ள அப்பாவிமக்களை குறிவைத்து புதிதாய் தங்களது ஆயுதங்களையும் போர்த்தளவாடங் களையும் பிரயோகிக்கின்றனர்.

நயவஞ்சக எண்ணத்துடன் படைக்கலன்களைக் கொண்டு அரசு பயங்கரவாத பயமுறுத்தும் நட வடிக்கைகள் மூலம் வழிப்பறிக் கொள்ளை யடிக்கும் அவர்களது செயல்முறைப்போக்கில் ஏகாதிபத்தியவாதிகள் தீவிரவாதத்தை கட்டுப் படுத்தப்போகிறோம் எனும் வாதத்தை முன்வைத் தாலும்கூட, மத அடிப்படை பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திட முடியவில்லை என்பதை சரித்திரம் நிரூபித்திருக்கிறது என்பதை எப்படியும் பார்க்கத்தவறக்கூடாது. தங்களது சொந்த நட வடிக்கைகள் மூலம் அவர்களே மனித இனத்திற்கு பேராபத்தினை விளைவிக்கக்கூடிய புதிய பயங்கர வாத சக்திகளை உருவாக்கிவிட்டிருக்கின்றனர்.

ஐஎஸ்ஐஎஸ் மற்றும் பிற மத அடிப்படைவாத சக்திகளின் பயங்கரவாதத்திற்கும் கொடுங்கோன் மைக்கும் எதிரான எதிர்ப்புணர்வு கொண்டவர் களாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர் களது கூட்டாளிகளும் மற்றும் அவர்களுடன் உடன்படுபவர்களும் என்னதான் பாசாங்கு செய்தாலும் மதம், இனம், பிராந்தியம் மற்றும் இன்னும் பிறவற்றை மையமாக வைத்து உழைக் கும் மக்கள் மத்தியில் நீண்டகால பிரிவினையை உத்திரவாதப்படுத்திட அவர்கள் உண்மையில் இத்தகைய சக்திகளை நீண்ட காலம் வைத்திருந்து அவைகளை வளர்த்தெடுப்பதில் கவனமாயிருக் கின்றனர். அதன் மூலம் அவர்களது கொடிய திட்டங்களை எதிர்த்து லட்சக்கணக்கான ஒடுக்கப் படும் மக்கள் உண்மையில் கிளர்ந்தெழுவதற்கான வாய்ப்பினை தடுத்து விடுகின்றனர். அவர்கள் இவ்வாறாக அனைத்துவகை உதவிகளையும் ஆதர வினையும் நல்கி மத அடிப்படைவாத சக்திகள் வளர்வதற்கு உதவிசெய்து அவர்களை வளர்த் தெடுக்கின்றனர்.

இத்தகைய நடவடிக்கைகளை எந்த அளவிற்கு மேற்கொள்கின்றார்களோ அந்த அளவிற்கு அரபு நாட்டு மக்கள் உண்மையில் மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள மக்கள் அனைவரும் பலமிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாக, குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு கொண்ட வர்களாக மாறிவிடுகின்றனர். இத்தகைய உணர்வு களையும் உணர்ச்சிகளையும் தங்களுக்குச் சாதக மாகப் பயன்படுத்தி மீண்டும் ஐஎஸ்ஐஎஸ் போன்ற சக்திகளும் பிற சக்திகளும் ஒன்றன் பின் ஒன்றாக மத அடிப்படைவாதத்தை நிலைநாட்டி மக்கள் மத்தியில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்திடவும் முடிகின்றது. ஒவ்வொரு முறையும் ஓர் புதிய தீவிரவாத சக்தி உருவாகி இப்போது மிகவும் கொடியதோர் அமைப்பு வளர்ந்திருப்பதை உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஐஎஸ்ஐஎஸ்-ஐ எங்ஙனம் உருவாக்கினார் களோ அவ்வாறே இதே அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் சோவியத் செல்வாக்கினை அகற்றிடவும் அல்லது அந்நாட்டு மக்களது விருப்பத்திற்கு மாறான தலைமையிலான ஜனநாயகத்தை கொண்டு வரவும் தலிபான் மற்றும் அல்-கொய்தா அமைப்பினை ஆப்கானிஸ்தானில் உருவாக்கினர் கள். அதன் பின்னர் இத்தகைய கொடூரமான பயங்கரமான அமைப்புகள் மீதான உலக மக்களின் கருத்து ஒட்டுமொத்தமாக அவர்களுக் கெதிராக இருந்ததால், அமெரிக்க ஆட்சியாளர்கள் அந்த பயங்கரவாதத்திற்கெதிராக போரினையும் கூட அறிவித்தனர். ஆனால் மீண்டும் அரசு பேரழிவு பயங்கரவாதத்துடன் பயங்கரவாதத்திற் கெதிரான போர் நடத்தப்பட்டு அதன் போக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் நிராதரவற்ற ஆப்கானிஸ்தானை நிர்மூலமாக்கினர்.

இப்போது தலிபான்களையும் அல்-கொய்தா வையும் அழித்தொழித்த போக்கில் ஐஎஸ்ஐஎஸ் போன்ற சக்திகள் உருவாக அமெரிக்க ஏகாதி பத்தியவாதிகள் வழிவகுத்தனர்.

ஐஎஸ்ஐஎஸ் எவ்வகையானதோர் சக்தியாக விளங்குகிறது? அவர்கள் அருவருக்கத்தக்க கொடூரமான, கொடுமையான பிற்போக்குவாதி களாக, மனிதாபமற்ற அணுகுமுறை கொண்டவர் களாக, கோபத்தை கிளறுபவர்களாக, விஷமத் தனம் கொண்டு பெண்களை வெறுப்பவர்களாக மற்றும் பெண்கள் மீது கொடூர எண்ணம் கொண்டவர்களாக, கடும் பிரிவினைவாதிகளாக மற்றும் அப்பாவி மக்கள் என்றும் பாராது கொலை புரிவதில் மகிழ்ச்சியுறும் மனம் கொண்டவர் களாக உள்ளனர். இவ்வுலகம் நீண்ட காலத்திற்கு முன்னரே கைவிடப்பட்ட வாழ்க்கை முறை களையும் காலாவதியாகிப்போன கொள்கை களையும் ஆணவத்துடன் போதித்து அவர்கள் தங்களை தக்கவைத்துக்கொண்டிருக்கின்றனர்.

அனைத்து நியதிகளையும் காலில் போட்டு மிதித்து தனியுரிமை, சுதந்திரம், விடுதலை, பகுத்தறிவு சிந்தனை மற்றும் மனிதாபிமானத்திற் கும்கூட மதக்கட்டளைகளை "பட்வா" வழங்கி அவர்கள் முழுமையான சர்வாதிகார ஆட்சி செய்கின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் மற்றும் அவர்களின் தலைவணங்கிகளும் இத்த கைய கொடூரமனம் கொண்ட பேய்களை உருவாக்கிவிட்டமைக்காக பாரிஸ், லெபனான் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிச்சயம் பதில் சொல்லியாக வேண்டும். ஏனென்றால் இவர்களும் அப்படிப்பட்டவர்களில்லையா? பாரிஸ் அல்லது லெபனான் இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது ஐஎஸ்ஐஎஸ்ஸின் தாக்குதலுக்கு இரையான அப்பாவி மக்கள் இக்கேள்வியை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைப் பார்த்து துணிச்சலாக கேட்டிட வேண்டும்.

தொடர்ச்சி 4ம் பக்கம்

# ஏகாதிபத்தியம், அடிப்படைவாத பயங்கரவாதத்தை முறியடிக்க ஒன்றுபட்ட மக்கள் இயக்கமே ஒரே வழி

3ம் பக்கத் தொடர்ச்சி

அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்திய சக்திகளின் பட்டவர்த்தனமான உள்நோக்கம், முதலில் அடிபணிய மறுத்த ஆட்சியாளர்களை அகற்றிவிட்டு அந்நாட்டில் மற்றும் அப்பிராந்தியத்தில் எதிர்ப்பற்றதோர் அரசியல் பிடியினை முழுவதுமாக கொண்டுவருவது. மத்திய கிழக்கு நாடுகளில் அவ்வாறு அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிய மறுத்தவர்கள் சதாம் ஹுசேன் மற்றும் பஷார்–அல் ஆஸாத் ஆகியோராகும். அதனால் ஏதாவது ஒரு காரணத்தைக்காட்டி அவர்கள் குறிவைக்கப்பட்டார்கள்.

இரண்டாவதாக, உறுதியான, அரசியல் ரீதியிலான கட்டுப்பாட்டினை அடையப்பெற்ற பின்னர், அவ்வாறு குறி வைக்கப்பட்ட நாடுகளின் அல்லது பிராந்தியத்தின் இயற்கை வளங்களை தங்களது முழு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது. ஈராக் மற்றும் சிரியா ஆகிய இரண்டுமே எண்ணெய் வளமிக்க நாடுகளாகும்.

மூன்றாவதாக, அரசியல் ரீதியில் இயற்கை வளங்கள் மீதும் கட்டுப்பாட்டினை நிறுவிக்கொண்டு, கொள்ளையடித்த இயற்கை வளங்களை தாங்கள் குறிவைத்த நாடுகள் மற்றும் பிராந்தியத்தின் வழியாக ஏகாதிபத்தியவாதிகள் விரும்பும் இடங்களுக்கும், துறைமுகங்களுக்கும், நிலப்பகுதிகளுக்கும் தங்குதடையின்றி சுதந்திரமாக சிரமமின்றி கொண்டுசெல்வதை உறுதிப்படுத்துவது.

நான்காவதாக, அரசியல் மற்றும் பொருளாதார பேரழிவிற்கு மேலாக அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகள் இந்நாடுகளில் மத அடிப்படைவாதத்தையும் மதப்பிரிவினையும் முழுவதுமாக ஏற்படுத்தி, அனைத்து பிற்போக்கு சிந்தனைகள் மற்றும் வாழ்க்கை முறைகளை பரவச்செய்து இவைகளை பிரச்சாரம் செய்யும் சக்திகளை வளர்த்துவிடுவது என்பதாகும். அவர்கள் இவ்வாறாக, அந்நாட்டு மக்களின் அறநெறியொழுக்க கலாச்சார முதுகெலும்பை சிதறடித்திட முயற்சித்தனர்.

ரஷ்யா எவ்வாறிருக்கிறது? ரஷ்யாவிற்கு சிரியா நாடு அதன் புறக்காவல் எல்லையாகவும் ஆஸாத் அதன் கூட்டாளியாகவும் இருந்தார் என்பதை மறந்துவிடலாகாது. எனவே, ஆஸாத்தை அகற்றுவது என்பது அந்நாட்டின் எண்ணெய் வளத்தின் மீதும் அந்நாட்டின் மீதும் ரஷ்யா கொண்டிருந்த கட்டுப்பாட்டை இழப்பதென்பதாகும். சூழ்நிலை தொடக்கத்தில் யுஎஸ் ஏகாதிபத்தியத்திற்கு சாதகமாக இருந்தது. ஆனால், ஆஸாத்தை அகற்றிடும் திட்டம் தோல்வியடைந்ததால் ஐஎஸ்ஐஎஸ் வளர்க்கப்பட்டது. பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராக உலக மக்களின் கருத்து திரும்பத்துவங்கியதால் களம் தமக்கு சாதகமாக இருப்பதாக ரஷ்ய ஆட்சியாளர்கள் கண்டனர். மேலும், எகிப்து நாட்டில் ஜெட் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது, பாரிஸ் சம்பவம், ரஷ்ய போர் விமானத்தை துருக்கி சுட்டு வீழ்த்தியது ஆகிய இவையனைத்தும் ரஷ்ய ஆட்சியாளர்களை இன்னும் பலத்துடன் செயல்படத்தூண்டியது. அதனால் அவர்களும்கூட சிரியா மீது சிரியாவிலுள்ள ஐஎஸ்ஐஎஸ்ஸின் தளங்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். காலப்போக்கில் சிரியா மக்கள் மீதும் தாக்குதல் தொடுத்தனர்.

நாட்டின் மீது குண்டுகளைப்போடுவது என்பது, அவைகளை எவர் விழச்செய்தாலும் அது மக்களை கொல்லவும் காயப்படுத்தவும் செய்யும் என்பதையும் பிழைத்த குழந்தைகளை நிலைகுலைய வைக்கும் என்பதையும், நாட்டின் உட்கட்டமைப்பை பாதிக்கும் என்பதையும், குடியிருப்புகளை அழித்துவிடும் என்பதையும், சுற்றுச்சூழலை நச்சுத்தன்மையாக்கிடும் என்பதையும், அகதிகளை உருவாக்கும் என்பதையும், வன்முறையினைத் தூண்டும் கசப்பான ஆசைக்கு தூபமிடும் என்பதையும், நாட்டின் பெருமளவு வளங்களை விரையமாக்கும் என்பதையும் மறந்துவிடலாகாது.

தற்பொழுது ரஷ்யா உள்நாட்டு பிரச்சினைகளாலும் நெருக்கடியாலும் சூழப்பட்டுள்ள ஒரு ஏகாதிபத்திய சக்தி என்பதையும் அதனால் சாராம்சத்தில் பிற ஏகாதிபத்தியவாதிகளின் உள் நோக்கத்திலிருந்து பெரிதாக மாறுபட்டதொன்றும் அதனிடமிருக்காது என்பதையும் ஒருவர் பார்க்கத் தவறக்கூடாது. இறுதியான உண்மை இங்குதானிருக்கின்றது. வெறிபிடித்த அடிப்படைவாத பயங்கரவாதிகளுக்கும் ஈவிரக்கமற்ற போர்வெறி அரசு பயங்கரவாதிகளுக்குமிடையேயான பதவிக்கும் பொருளுக்குமான மோதலில், அது பாரிசிலாகட்டும் அல்லது ஐரோப்பாவில் எங்கிருந்தாலும் ஈராக், சிரியா, வட ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் அல்லது உலகின் எந்த மூலையிலிருந்தாலும் உலகத்தின் விடுதலை மற்றும் அமைதியை விரும்பும் மக்கள் ஒன்றும் செய்ய முடியாமல் கண்ணுற்றுக்கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்கள் வெகுகாலம் அவ்வாறிருக்க முடியாது. அவர்கள் வேறு எதற்கு இல்லாவிட்டாலும் தமது சொந்த வாழ்வுக்காகவாவது சிந்தித்து செயல்பட்டேயாகவேண்டும்.

சந்தேகமின்றி ஒரே குரலில் இதைக்கண்டித்தேயாகவேண்டும். அதுமட்டுமின்றி, ஐஎஸ்ஐஎஸ் மற்றும் அதன் கூட்டாளிகள் போன்ற அடிப்படைவாத சக்திகளை பூண்டோடு அழித்தொழிக்கவும் இத்தகைய வெறிபிடித்த கொலைகாரர்கள் பாரிஸ் மற்றும் லெபனானில் நடத்திய மதிகெட்ட கொடுந்தாக்குதலுக்கெதிராகவும் வெகுண்டெழ வேண்டும். அதே சமயம் சரியான புரட்சிகர தலைமையிலான, பெருமளவில் உலக அளவிலான, குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான நன்கு திட்டமிட்டு ஒருங்கிணைக்கப்பட்ட, வலிமைமிக்க அமைதிக்கான போராட்டங்களுடன் உலக மக்கள் ஒவ்வொரு நாட்டிலும் வெகுஜன இயக்கங்களை வளர்த்தெடுத்து கட்டவிழ்த்துவிட முடியாவிடில், அத்தகைய போராட்டங்கள் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களாலும் அடிப்படைவாதிகள் நடத்தும் பேரழிவினாலும் பாதிக்கப்பட்ட நாடுகளில் உக்கிரமமான இயக்கமாக வெடித்துப் பரவாவிட்டால், தற்போது நாம் கண்ணுற்றுவரும் மரண ஊர்வலங்களுக்கு ஓர் முடிவுகட்ட முடியாது.

குறிப்பாக முதலாளித்துவ ஏகாதிபத்திய உலகின் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள எழுச்சி மிக்க இளைஞர் சமுதாயம் மற்றொரு உண்மையினையும் கண்டுணர வேண்டும். கடுமையான சந்தை நெருக்கடி மற்றும் தீர்க்கவியலாத தொழில் வளர்ச்சி மந்தநிலையினால் முற்றிலும் சீர்கெட்டுப்போன உலக முதலாளித்துவ ஏகாதிபத்திய அமைப்பு உலகத்தின் ஒவ்வொரு முதலாளித்துவ நாட்டிலும் மிக மிக ஆழமான பிரச்சினைகளையும், பிணியினையும், தீயொழுக்கங்களையும் மற்றும் ஒட்டுமொத்த மனித இனத்திற்கு நெருக்கடியினையும் உருவாக்கி வருகின்றது.

மேற்கூறியவாறு வேலையின்மை, வறுமை, பசி, இருப்பிடமின்மை, உயிர் பாதுகாப்பிற்கும் வாழ்வாதாரத்திற்கும் நம்பிக்கையற்ற தன்மை மற்றும் ஒட்டுமொத்த கலாச்சார சீரழிவு போன்ற அம்சங்கள் இனிமேல் வளர்ச்சியடையாத அல்லது மிகவும் ஏழை நாடுகளுக்கு மட்டும் உரித்தானது அல்ல என்றாகிவிட்டது. இவையாவும் பாரம்பரியமாக "வளர்ச்சியடைந்த" நாடுகள் அல்லது மேற்கத்திய உலகத்தின் செல்வம் கொழித்த சமூகங்களில் முக்கியத்துவமற்ற ஒன்றாக மாறிவிட்டது.

ஒருபுறம் நம்பிக்கையின்மை, பொறுப்புணர்ச்சி, சினம் ஆகியன பொதுமக்கள் மனங்களில் பெருமளவில் பரவி, அது சுரண்டல் சமூக ஒழுங்கான முதலாளித்துவ–ஏகாதிபத்தியத்திற்கெதிராக திசைவழிப்படுத்திட காத்துக்கொண்டிருக்கின்றது. ஆட்சியாளர்கள் புவியின் அடிவானத்தில் தோன்றும் சிவப்பு வண்ணத்தை நன்கு பார்க்க முடியும்! எனவே அவர்கள் எந்த எதிர்ப்பினையும் ஈவிரக்கமற்று ஒழித்துக்கட்டிட முனைகின்றனர். தந்திரமாக திட்டமிட்டு மக்களிடையே பிரிவினைவாத வித்துக்களை தூவி வருகின்றனர். அனைத்து வகை பிரிவினைவாத பண்புகளை தூபம்போட்டு வளர்த்து அதனடிப்படையில் பல்வேறு நாடுகளில் அல்லது ஒவ்வொரு நாட்டிலுமுள்ள மக்கட் பிரிவினரை ஒருவர்மீது ஒருவர் மோதிக்கொள்ள வைக்கின்றனர். மேலே விவாதித்தவாறு மத அடிப்படைவாதம் பெருகி வளர்ந்ததும்கூட பெரும்பாலும் இந்த ஏகாதிபத்தியவாத திட்டத்தின் மூலம்தானாகும்.

மேலும், இந்த மத அடிப்படைவாதிகள் தங்களது கட்டுப்பாட்டை மீறுகையில், உலகத்தின் பார்வை அவர்களுக்கு எதிராக திரும்புவதால் இதே ஏகாதிபத்தியவாதிகள் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து அவர்களை அடக்கி வைக்கின்றனர். அப்படி இந்த மத அடிப்படைவாதிகளை அடக்கி வைக்கின்றோம் அல்லது கட்டுப்படுத்துகிறோம் என்று கூறிக்கொண்டு எந்த அளவிற்கு அந்நாடுகளில் பேரழிவு ஆக்கிரமிப்பை செய்கின்றனரோ, அந்த அளவிற்கு ஏகாதிபத்தியத்திற்கெதிராக உலகத்தின் பார்வை தீவிரமாகின்றது. அது ஏகாதிபத்தியத்திற்கெதிராக குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான உணர்வுகளை ஏற்படுத்துகிறது. ஏற்கனவே இது குறித்து மேலே குறிப்பிட்டிருக்கிறோம். இதனை மத அடிப்படைவாதிகள் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இதனைத்தான் இந்த பயங்கர தீவிரவாதிகள் ஏகாதிபத்தியவாதிகள் செய்திடவேண்டுமென்று விரும்புகின்றனர். ஏகாதிபத்திய தாக்குதல்களை தடுத்து நிறுத்தி முறியடிக்கின்றோம் என்ற பெயரில் இந்த மதஅடிப்படைவாதிகள் மதவெறிப்பிரச்சாரத்தையும் அவர்களது கொடிய தீவிரவாத செயல்களையும் இன்னும் அதிகரிக்கின்றனர்.

எனவே, ஆங்காங்கே நடைபெறும் தீவிரவாத செயல்கள் மற்றும் குறிப்பாக அப்பாவி பொது மக்கள் மீதான வன்முறைக்கு எதிராக வெகுண்டு எழுந்து செயல்படவியலாத சூழ்நிலைமை இருப்பினும், ஏகாதிபத்திய கொலைகாரர்களுக்கு அது வெகு நாட்களுக்கு பயன்தர முடியாது என்பதை ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்கள் உணரவேண்டும். மாறாக, ஏகாதிபத்தியவாதிகளுக்கு இத்தகைய செயல்கள் மக்களிடையே குழப்பமேற்படுத்துவதற்கு சாதகமான ஒன்றாகவும் பயங்கரவாதத்தை எதிர்த்து போராடுகிறோம் என்ற பெயரில் மேலும் அதிக அடக்குமுறை நடவடிக்கைகளை கட்டவிழ்த்துவிடுவதற்கும் கொடுங்கோன்மை புரிவதற்கும் சாதகமானதாக அமைகின்றன. அது அவர்கள் மேலும் வழிப்பறிக் கொள்ளையடிப்பதற்கு ஊக்கமளித்து இறுதியில் மக்களின் எதிர்ப்பு சக்தியையே நசுக்குகின்றன. அதன் வெளிப்பாடாக, உலகில் அல்லது எந்த ஒரு நாட்டிலும் பலம் வாய்ந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களை கட்டியெழுப்புவது மேலும் சிரமமாகின்றது.

பின் நமக்கு என்ன தேவைப்படுகின்றது? மீண்டும் திரும்பக்கூறுவதானால், மதசார்பின்மை கண்ணோட்டத்துடன் ஒவ்வொரு நாட்டிலும் நீண்ட நெடிய நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட வெகுஜன இயக்கங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதுதான். அவை எந்தத் தீவிரவாத அமைப்பினையும் சார்ந்திராமல் தீவிர, வலிமைமிக்க, ஏகாதிபத்தியத்தையெதிர்த்த அமைதிக்கான போராட்டமாகவும் இருக்க வேண்டும். அத்தகைய போராட்டங்களில் விடுதலை மற்றும் அமைதியை நேசிக்கும் அனைத்துத்தரப்பு மக்களையும் ஈடுபடுத்தி அவர்களின் சக்தியை ஒன்று குவித்திட வேண்டும். மேலும் அது ஏகாதிபத்திய சுறாக்களின் பிரித்தாளும் மற்றும் விரக்தியடையவைக்கும் முயற்சிகளைக்கண்டு கலங்காத போராட்டமாக அமைய வேண்டும்.

இது போன்ற அமைதிக்கான இயக்கங்கள் உடனடி போர்நிறுத்தம், ஆயுதத்தடை, போர்ப்பயிற்சி, போராளிகளை வழங்குவது மற்றும் தீவிரவாதிகளுக்கு நிதியுதவி செய்யும் வழிகளை அடைப்பது போன்றவற்றை கவனித்திட வேண்டும்.

இறுதியாக, ஆயிரக்கணகான மைல்கள் பறந்து வந்து தங்கள் ஆயுதங்களை விற்பனை செய்து, நாட்டின் இயற்கை வளங்களை சுரண்டி, தங்கள் விருப்பத்திற்கேற்றவர்களை ஆட்சிக்கட்டிலில் ஏற்றிய போர்வெறி பிடித்த சக்திகளை விலக்கி வைத்து, பிரதானமாக சம்பந்தப்பட்ட நாட்டு மக்கள் பேச்சுவார்த்தையொன்றினை எட்ட வேண்டும்.

இவையாவும் நமது வெறும் அபிலாஷைகள் மட்டுமல்ல! இது மட்டுமே சமூக மாற்றம் மற்றும் வளர்ச்சியின் தவிர்க்கவியலா விதி முடிவு செய்த சரியான பாதையாகும்! இதுவே வழிநடக்க வேண்டிய சரித்திரபூர்வமான பாதையாகும்! மக்கள் இதை கண்டுகொள்ள வேண்டுமென அவர்களின் வெற்றியானது காத்துக்கிடக்கின்றது!

# கல்விக் கொள்கையின் பிரதான நோக்கம் வெகுஜனங்களுக்கு கல்வியை மறுப்பதே

1ம் பக்கத் தொடர்ச்சி

இவர்களது இந்த நடவடிக்கைக்கு ஊக்கம் தருவது போல், சிபிஐ(எம்) சற்று விசித்திரமாக, மேற்கு வங்காளத்தில் தொடக்கக் கல்வியில் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக போதிப்பதை ரத்து செய்வதென்றும் தடையில்லாத் தேர்ச்சியைக் கொண்டு வருவதென்றும் முடிவு செய்தனர். எதிர்ப்பை முறியடிப்பதற்காக, கல்வி நிறுவனங்களின் தன்னாட்சியில் அப்பட்டமாகத் தலையிட்ட அவர்கள் கல்வி நிலையங்களை அரசாங்கத்தின் ஒத்தூதும் நிறுவனங்களாக மாற்றினர். ஆங்கில அறிவு கிடைக்காததால், உயர் கல்விக்குத் தங்களால் நுழைய முடியாததை மாணவர்கள் உணர்ந்தனர். இதனைத் தொடர்ந்து தனியார் ஆங்கில–வழிப் பள்ளிகள் மேற்குவங்கத்திலும் மற்ற மாநிலங்களிலும் புற்றீசல்கள்போல் முளைத்தன.

இறுதியாக, 1986இல் ராஜீவ் காந்தி தலைமையிலான மத்திய காங்கிரஸ் அரசாங்கம் 'புதிய கல்விக் கொள்கையைக் (New Education Policy - NEP 1986) கொண்டுவந்தது. கல்வியை சரக்குமயமாக்கும் வியாபாரமயமாக்கும் முதலாளித்துவ சதியை முழுவதுமாக வெளிக்கொணர்ந்தது. கல்விக் கொள்கையை வகுக்கும் பொறுப்பானது புகழ் பெற்ற கல்வியாளர்கள் மற்றும் கல்வி நிபுணர்களிடம் வழங்கப்படுவதற்கு மாறாக முன்னணி ஏகபோகங்களான அம்பானி மற்றும் பிர்லாவிடம் வழங்கப்பட்டது. தங்களது குழந்தைகளின் கல்விக்காக பெற்றோர்கள் தங்களது சக்திக்கும் மீறி முயற்சிப்பார்கள் என்பதால் கல்வி என்பது பதிலுக்கு லாபத்தை உத்திரவாதப்படுத்தும் பிரத்யேகமான முதலீட்டுக் களம் என்று அவர்கள் கூறினர். அது மட்டுமல்லாது மக்களுக்குக் கல்வி வழங்கும் பொறுப்பை அரசாங்கம் கட்டாயம் கைவிட வேண்டும் என்றும் அவர்கள் தெளிவுபடுத்தினர்.

இது அரசாங்கக் கல்வி நிறுவனங்கள் படிப்படியாக மதிப்பிழக்க வழிவகுத்தது. இந்திய மற்றும் வெளிநாட்டு கார்ப்பொரேட்டுகளின் தலைமையில் தனியார் முதலீட்டாளர்கள் கல்வித் தொழிலுக்குள் இழுத்துவரப்பட்டனர், அதோடு லாபமீட்ட வேண்டும் என்ற நோக்கத்தால் முதலீட்டாளர்களும் கல்வி நிறுவனங்களும் பணத்தை அறுவடை செய்யத் தொடங்கினர், அங்கே ஆசிரியர்களும் மாணவர்களும் பணம் – சம்பாதித்தல், சுய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் நிலைக்குள் மேலும் மேலும் தள்ளப்பட்டனர்.

மற்றொருபுறம், கல்விக்கட்டணங்கள் அபரிமிதமாக அதிகரித்ததால் ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் எந்த ஒரு தரமான கல்வியும் கிடைக்காமல் வெளியேற்றப்பட்டனர். அனைவருக்கும் கல்வி என்பதற்கு மாறாக இந்த அமைப்பு முற்றிலும் பாரபட்சமானதாக மாறியது.

ஒருபுறம், சாமானிய ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஏராளமான எண்ணிக்கையில் இருந்தனர். அவர்களுக்கு வேலை சார்ந்த தொழிசார் –கல்வி என்ற பெயரில் குறைந்த அளவிலான கற்றல் (Minimum Level of Learning - எம்எல்எல்) வழங்கப்பட்டது. சுயவாழ்க்கையை அமைத்தல், சுயநலமாக இருத்தல் என்ற நோக்கமும் கண்ணோட்டத்துடனும் வழங்கப்பட்ட அப்படி வழங்கப்பட்ட குறைந்துபட்சக் கல்வியும் கல்வியின் தரத்தை மேலும் சிறுமைப்படுத்திவிட்டது. மற்றொருபுறம், அதிக பொருட்செலவில் அதிக கல்விக்கட்டணத்தோடும், டிஜிட்டல் கற்றல் உபகரணங்களோடும் இயங்கும் பள்ளிகளில், உலகச் சந்தைக்கு போட்டியிடத் தகுதியை உருவாக்கும் வகையில் பொருத்தமான அளவுக்கான கல்வி (Optimum Level of Learning) வெகு சில வசதிபடைத்த மாணவர்களுக்கு அதிகபட்ச அளவிலான கற்றல் வழங்கப்பட்டது.

### தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கை

மத்தியில் ஆண்ட காங்கிரஸ் அரசாங்கம் இந்தக் கொள்கையைக் கொண்டுவந்தது. பாஜக, திமுக, அதிமுக உள்ளிட்ட மற்ற அனைத்து பாராளுமன்றவாதக் கட்சிகளும், மார்க்சிஸ்டுகள் என்று அழைக்கப்படுவர்களும் இதே பாதையை மகிழ்ச்சியோடு பின்பற்றத் தொடங்கினர். இதோடு வேறு பல மோசமான மாற்றங்களும் கொண்டுவரப்பட்டன. மேற்கு வங்காளம் அல்லது முந்தைய பிரிக்கப்படாத ஆந்திர மாநிலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கை (தேகொ 86)யில் சேர்க்கப்பட்டு, பின்னர் பெருத்த ஆரவாரத்தோடுக் கொண்டுவரப்பட்ட கல்வி பெறும் உரிமைச் சட்டம் (ஆர்டிஇ) 2009 இல் விரிவுபடுத்தப்பட்டது.

இது கற்பித்தல்–கற்றல் செயல்முறைப் போக்கின் ஆணிவேரையே தகர்த்துவிட்டது. தடையில்லாத் தேர்ச்சி என்பது படிக்கவே வேண்டாம் என்ற எண்ணத்திற்கு வழிவகுத்து விட்டது. இதனால் கல்வி என்பது எதிர்பாத்த விளைவை உருவாக்காததால் பள்ளிகளில் இடைநிற்றல் மேலும் அதிகரித்தது. இதனால் ஏற்கனவே வறுமையால் முதுகொடிந்து இருந்த சாமானிய ஏழை மாணாக்கர்களின் கல்விக்கு மேலும் தடையை வித்திட்டது. இதற்கிடையே மத்தியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சிக்கு வந்தபோது கல்வியின் கருத்துக்களில் மதவாதத்தை பாஜக புகுத்தியது. விழுமியங்கள் அடிப்படையிலான கல்வி என்ற பெயரில் அது பெரும்பான்மை மத சமூகத்தின் மத சிந்தனைகளையும், உணர்ச்சிகளையும், மூடப்பழக்கவழக்க எண்ணங்களையும் கொண்டுவந்தது. இதன்மூலம் அதுவரை கொஞ்சமேனும் இருந்த ஜனநாயகபூர்வ–மதச்சார்பற்ற–விஞ்ஞான பூர்வ கல்வியின் மிச்ச சொச்சங்களையும் அழிப்பதற்கு முற்பட்டது. அதோடு உலக வங்கி, ஐஎம்எஃப். மூலமாக ஏகாதிபத்திய மூலதனத்தின் ஆதரவோடு மாவட்ட தொடக்கக் கல்வித் திட்டம் (டிபிஇபி) மற்றும் சர்வ சிக்ஷா அபியான் (எஸ்எஸ்ஏ) திட்டங்களும் கொண்டுவரப்பட்டன. இதன்மூலம் தங்கள் பிள்ளைகளைக் கல்வி கற்பதை பெற்றோர்கள்தான் உத்திரவாதப்படுத்த வேண்டும்; என்று கூறப்பட்டது. பொறுப்பு பெற்றோர்களின் தலையில் சுமத்தப்பட்டது. கார்ப்பொரேட் துறைகளும் அவர்களது கல்வி தொழிலும் வளம் கொழிக்கத் தொடங்கின.

### ஆர்எஸ்எஸ் – பாஜகவும் அதே கொள்கைகளையே பின்பற்றுகின்றன

இந்த சூழ்நிலைமையின் பின்னணியில்தான் மதவாத ஆர்எஸ்எஸ் – பாஜக கூட்டணி மத்திய அரசாங்கத்தின் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தது. அதிகாரத்திற்கு வந்த முதலே அவர்கள் கல்வி அமைப்பை மாற்றி அமைக்க எத்தனித்து வருகின்றனர். தே க கொ 86இல் உள்ள குறைகளை நீக்குகிறோம் என்ற பெயரில் புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்த அவர்கள் தயாராகி வருகின்றனர். ஆனால் அதற்காக அவர்கள் வெளியிட்டுள்ள வரைவு ஆவணங்களை மேம்போக்காகப் பார்த்தாலே கூட இவர்கள் கூறும் திருத்தம் என்பதை ஏற்கனவே உள்ள அனைத்து கொள்கைகள் மற்றும் தே க கொ 86 நடவடிக்கைகளின் தொடர்ச்சியே என்பது விளங்கும். அவற்றை அப்படியே பின்பற்றுவதோடு மட்டுமல்லாமல், அவற்றை மேலும் தீவிரமாக்கும் நோக்கத்தோடு வடிவம் கொடுக்க முயற்சிக்கின்றனர். கல்வியை வியாபாரமயம்– தனியார்மயமாக்குவதைத் தொடர்வதோடு அதை மேலும் செலவுமிகுந்ததாக ஆக்குகின்றனர்.

சமீபத்தில் பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கம் 'உயர்கல்வித் துணைத் துறையில்' 'சந்தை அணுகுதலுக்கான' 'வாய்ப்புகள்' குறித்த தனது அறிக்கையை உலக வர்த்தக அமைப்பிடம் (டபிள்யூ டி ஓ) சமர்ப்பித்தது. இதை அமல்படுத்தினால், அது நாட்டின் கல்வித் துறையை டபுள்யூ டி ஓ–காட்ஸ் அதிகாரத்தின் கீழ் கொண்டுவருவதற்கான மடைக்கதவைத் திறந்து விட்டு கல்வியை சர்வதேச வர்த்தகத்திற்கான ஒரு சாதாரண சரக்கு என்று மாற்றப்படுவிடும்.

வெளிநாட்டிலிருந்து முதலீடுகள் வந்தால் கல்வியில் வசதி வாய்ப்புகள் பெருகும், வெளிநாடுகளில் உள்ள நவீன தொழில்நுட்பங்கள் பெருகும் என்பது போன்ற கருத்துக்களை பரப்புகின்றனர். உள்நாட்டில் உள்ள முதலீட்டாளர்களால் நடத்தப்படும் தனியார் கல்வி நிலையங்களின் நிலைமையைப் பற்றி சமீப காலங்களாக வெளிவரும் தகவல்கள். அதிர்ச்சிக்குள்ளாக்கி வருகின்றன. கல்விக் கட்டண உயர்வு, நன்கொடை, முறையற்ற நிர்வாகம், அடிப்படை வசதிகள் இன்மை, ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் கூட வழங்காமை, எப்போது வேண்டுமானாலும் பணியை விட்டு நீக்கப்படலாம் என்ற சூழல், முறைகேடான கணக்கு பராமரிப்பு, மாணவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுதல், ஒழுக்கச் சீர்கேட்டையும் பணம் சம்பாதிக்கப் பயன்படுத்துதல் என எண்ணற்ற முறைகேடுகள் இன்று தனியார் கல்வி நிறுவனங்களில் நடைபெற்று வருவது அம்பலமாகிவருகிறது. இந்த மண்ணில் பிறந்து வளர்ந்தவர்கள் கல்வியில் வியாபாரம் செய்தாலே இந்த நிலைமை என்றால், அந்நியர் வந்து இந்த நாட்டு மாணவ மாணவியருக்கு நல்ல கல்வியைப் புகட்டுவார்களா என்ன? அதற்காக கோடிக்கணக்கில் தங்களது பணத்தை முதலீடு செய்வர்களா? அவர்களிடமிருக்கும் அந்தப் பணத்தை வைத்து அவரவர் நாட்டில் கல்வி கொடுத்துள்ளனரா?

இது கல்வியில் பெருகிவரும் தங்குதடையற்ற தனியார்மயம்–வியாபாரமயம் என்ற எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றும். அதன்பின்னர் கல்வி என்பது நாட்டின் ஏழைமக்களுக்கு எட்டாக்கனியாக ஆவதோடு மட்டுமல்ல, ஓப்பீட்டளவில் ஓரளவு வசதிபடைத்தவர்களுக்கும் கூட கல்வியை எட்டாக்கனியாக்கிவிடும். அதோடு, கல்வியின் நோக்கமே வியாபாரமயமாகும் போது, கல்வியின் கருத்துக்கள் மேலும் தொழில்முறைசார் கல்வியாக அல்லது உலக சந்தை சார்ந்ததாக தரம் குறைக்கப்பட்டு, கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி, கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள்–மாணவர்கள்–ஊழியர்களின் ஜனநாயக உரிமைகள் அதோடு சுதந்திரமான ஆராய்ச்சிக்கான வாய்ப்பு போன்றவை மறுக்கப்பட்டு எல்லாமே டபிள்யூ டி ஓ–காட்ஸ்ஸின் உத்தரவுகளை மட்டுமே பின்பற்றவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக நேரிடும். இந்திய மற்றும் அந்நிய கார்ப்பொரேட் நிறுவனங்களின் மூலதனத்தின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவும் முன்நிறுத்துவதையும் நோக்கியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பது திண்ணம். இதற்காக ஆசிரியர்கள்–மாணவர்கள் மற்றும் இந்த நாட்டு மக்களின் நலன்களும் நீண்டநெடிய மேதமை மற்றும் அறிவுப் பாரம் பரியமிக்க புகழ் மிக்க கல்வி அமைப்பையும் பலியிடுகின்றனர்.

கல்வி பெறும் உரிமைச் சட்டம் 2009இல் பள்ளிகளின் பாஸ்–பெயில் முறையை ஒழிப்பது என்ற அபாயகரமான முடிவு திணிக்கப்பட்டது. இது கற்பிக்கவேண்டும் கற்கவேண்டும் என்ற ஆர்வத்தையும் உந்துதலையுமே ஆசிரியர்களிடத்திலும் மாணவர்களிடத்திலும் நீர்த்துப்போகச் செய்து விட்டது. இது சாமானிய மாணவ மாணவியர்களின், குறிப்பாக ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர்களின், உயர்கல்விக்குச் செல்லும் வாய்ப்பை தடுக்கும் அத்தியாவசியத் திட்டமாக வந்து, இன்னமும் செயல்பட்டுவருகிறது. நாட்டின் மாணவர்கள்–ஆசிரியர்கள்–பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்கள் என ஒட்டுமொத்த மக்களும் இந்த கொள்கையை முற்றிலும் நிராகரித்து உள்ளனர். இந்த உணர்வை வெளிப்படுத்தும் விதமாக 20 மாநில அரசாங்கங்கள் மீண்டும் பாஸ்–பெயில் முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்று எழுத்துப்பூர்வமாக அறிக்கை சமர்பித்துள்ளனர். பாஸ்–பெயில் முறையை மீண்டும் அறிமுகப்படுத்துகிறோம் என்று பாஜக தலைமையிலான ராஜஸ்தான் மாநில அரசாங்கம் அறிவித்துள்ளது. தற்போதைய மத்திய அரசாங்கம் புதிதாகக் கொண்டுவரப்படுவதாகக் கூறப்படும் புதிய கல்விக் கொள்கையின் வரைவு அறிக்கையிலும் கூட பள்ளிக்குழந்தைகள் வாசித்தல், எழுதுதல் மற்றும் கணக்கிடுதல் போன்ற அடிப்படைத் திறமைகள் இல்லாமல் உள்ளனர் என்று அவர்களே வெளிப்படையாக ஒப்புக் கொண்டுள்ளனர். ஆனால் இவ்வளவுக்குப் பின்னரும் அதே பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கம் தடையில்லாத் தேர்ச்சிக் கொள்கையை ரத்து செய்யாமல் ஏதாவது சாக்குப்போக்குகளைச் சொல்லி காலம் தாழ்த்தி வருகிறது.

தற்போது முன்மொழியப்பட்டுள்ள புதிய தேசியக் கல்விக் கொள்கையின் கொள்கை ஆவணத்தைப் பார்க்கையில் இதற்கு முந்தைய அரசாங்கம் எப்படி மக்களுக்குக் கல்வி வழங்கும் பொறுப்பிலிருந்து விலக முடிவு செய்ததையும், ஒரே சீராக்குகிறோம் என்ற பெயரில் கல்வியின் அனைத்து விவகாரங்கள் மீது வலுவான மத்திய அதிகாரக் கட்டுப்பாட்டை உருவாக்க நினைத்ததைப் போல தற்போதைய அரசாங்கமும் அந்தக் கொள்கைகளை பேருவகையோடு தொடர விரும்புவது அம்பலமாகிறது. இவை எல்லாம் கல்வியின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக இருக்கும் என்று நாட்டின்

தொடர்ச்சி 6ம் பக்கம்

# கல்வியை ஆர்எஸ்எஸ்–பாஜகவின் காவிமயமாக்கும் அபாயகரமான புத்தூக்கம்

5ம் பக்கத் தொடர்ச்சி

கல்வியை நேசிக்கும் மக்கள் கடுமையாக விமர்சனம் செய்து இவற்றை முந்தைய அரசாங்கம் முழுமையாக அமல்படுத்தவிடாமல் ஓரளவு தடுத்தனர். ஆனாலும் கூட தற்போதைய அரசாங்கம் பழைய குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்கிறோம் என்று வெற்று வார்த்தைகளைப் பேசிக்கொண்டு தற்போதைய அரசாங்கம் அதே கொள்கைகளை மௌனமாக தொடர்ந்துவருகிறது.

### ஆர்எஸ்எஸ்–பாஜகவின் ரகசிய திட்டம் – காவிமயமாக்கல்

ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, பாஜக தலைமையிலான மத்திய அரசாங்கத்தை தற்போது மேற்பார்வை செய்துவரும் ஆர்எஸ்எஸ்–பாஜக கூட்டு கல்வியின் மீது மேலும் அபாயகரமான தாக்குதலைத் தொடுப்பதில் துரிதமாக ஈடுபட்டு வருகிறது. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தின் குறைகளையும், அவர்களது மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிரான மக்களின் கோப உணர்ச்சிகளையும் நயவஞ்சகமாக தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு பாஜக அரசாங்கம் தங்களது இந்துத்துவா கருத்துக்களைப் புகுத்தி கல்வியைக் காவிமயமாக்கும் ஆர்எஸ்எஸ்–பாஜகவின் திட்டங்களை அமல்படுத்துவதற்கு முனைந்து வருகிறது. இது இந்தியாவின் கல்விக்கு புதிய கடினமான நாட்களை கொண்டு வருகிறது.

காங்கிரஸ் அரசாங்கத்தின் கொள்கைகளை வலுவாக ஒருபோதும் எதிர்க்காமல், மாறாக அவை அனைத்தையும் முழுமனதோடு ஏற்றுக்கொண்ட ஆர்எஸ்எஸ்–பாஜக கூட்டணி ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பிறகு அதே கொள்கையைத் தான் பின்பற்றி வருகிறது. ஆனால் வெறும் பேச்சுக்காக அது சரியில்லை என்று கூறுகிறது. அப்படிக் கூறிக்கொண்டு முந்தைய அரசாங்கம் நவீன கல்வி என்ற பெயரில் உண்மையில் மேற்கத்தியக் கல்வியையே கொண்டு வந்தனர் என்று கூறுகின்றனர். அதை இந்தியமயமாக்கவேண்டும் என்று கூறிக்கொண்டு தேசிய வெறியைத் தூண்டிவிட்டு மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றனர். அவர்களது உண்மையான நோக்கம் என்பது அவர்களது வார்த்தைகளிலிருந்தே தெளிவாகிறது.

ஜூன் 2015இல் ஆர்எஸ்எஸ்ஸின் அங்கமான இந்து கல்வி வாரிய மாநாடு நடைபெற்றது. அதில் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர், ரயில்வே அமைச்சர், மத்திய நிதி இணை அமைச்சர் போன்ற அரசாங்கத்தின் முக்கிய நபர்களும் கலந்து கொண்டனர். அப்போது பேசிய இந்திய கல்வியை முழுமையான சீர்திருத்தம் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்திய ஆர்எஸ்எஸ்ஸின் பொதுச்செயலாளர் கிருஷ்ண கோபால் "நாட்டின் கல்வியில் இந்து சிந்தனைகளை கைவரப்பெறுதலே நாம் அதையும் செய்யும் வழியில் கச்சிதத்தையும் அடையும் முடிவில் குழப்பத்தையும் தீர்க்கவும் வழிகோலும்" என்றார்.

செப்டம்பர் 2015இல், பாஜக ஆளும் மாநிலங்களின் கல்வி மற்றும் கலாச்சார அமைச்சர்கள் அதோடு மத்திய அமைச்சர்கள் மற்றும் ஆர்எஸ்எஸ் பிரதிநிதிகளும் பங்கேற்ற கூட்டத்தில், பேசிய மத்திய கலாச்சார இணை அமைச்சர் மகேஷ் சர்மா நாட்டின் 'கலாச்சார சீர்கேட்டை' நீக்கி இளைஞர்களின் மனதில் 'விழுமியங்களை' புகுத்துவது குறித்த பாஜக அரசாங்கத்தின் திட்டங்களை விவரித்தார். அதோடு ஆர்எஸ்எஸ்ஸின் சித்தாந்தத்தை முன்னிறுத்த தாங்கள் முயற்சிக்கும் போது எழும் விமர்சனங்களைப் பற்றி அரசாங்கம் கவலைப்படாது என்றும் தெரிவித்தார்.

அந்த சித்தாந்தம் என்ன என்பதை குஜராத்தில் தொடக்க மற்றும் இடைநிலை வகுப்புகளில் கட்டாயமாக்கப்பட்டுள்ள பாடப் புத்தகங்களைப் பார்த்தால் தெளிவாகும். அங்கே, ஆர்எஸ்எஸ்ஸின் சித்தாந்தவாதி என்று அறியப்பட்ட தினாநத் பத்ரா எழுதிய புத்தகத்தில் 'கல்வியை நவீனமயமாக்குவதென்றால் மேற்கத்தியமயமாக்குவதென்று பொருளல்ல, இந்தியமயமாக்குவதென்பதே ஆகும்' (பக் 8) என்று கூறியுள்ளார். 'ஒருவரது தேசத்திற்காக இறப்பதும் சிறப்பே. மதத்திலிருந்து விலகி இருப்பது துன்பத்தின் ஆதாரம்' (ஷிக்கான்து பாரதியகரன்–பக் 118) என்று அவர் கருதுவதால் இந்தியமயம் என்பது மதத்தோடு நெருக்கமாக தொடர்புபடுத்தப்படுகிறது.

இந்தக் நோக்கத்தின் விரிவை பல்வேறு கருத்துக்களிலிருந்து பெறலாம். ஆர்எஸ்எஸ்–பாஜக கூட்டு, அதாவது அதன் தலைவர்களும் தொண்டர்களும் பாடப்புத்தகங்களில் உள்ள வரலாற்றை ஆர்எஸ்எஸ் / சங் பரிவாரின் இந்துத்துவா கண்ணோட்டத்தின் அடிப்படையில் மாற்றி எழுத எத்தனிக்கின்றனர். இந்த முயற்சிகளை புகழ் பெற்ற வரலாற்றியலாளர்களின் கடுமையான விமர்சனத்திற்கு ஆளாகியுள்ளது. இந்த முயற்சியின் போக்கில், இந்த எழுத்தாளர்கள் 'விஞ்ஞானபூர்வ மனப்பான்மையை' விலக்குவதோடு மட்டுமன்றி, 'வரலாற்று மனப்பான்மையின்' அடிப்படைகளுக்கும் துரோகம் செய்கின்றனர் என்று விமர்சனம் எழுந்துள்ளது. கற்பனையான மாயாவாதக் கருத்துக்களை வரலாற்று உண்மைகள் என்று அவர்கள் கூறிக்கொள்கின்றனர். மாயவாதத்தை வரலாறாக கூறிக்கொள்ளாமலேயே இந்தியாவின் உண்மையான சாதனைகளைக் கண்டு பெருமைப்படுவதற்கு விஷயங்கள் இருக்கின்றன என்ற உண்மையை அவர்கள் மறைக்கிறார்கள்'.

தங்களது இந்துத்துவா கண்ணோட்டத்தை புகுத்துவதற்காக, ஆர்எஸ்எஸ்–பாஜக கூட்டணி பள்ளிப் பாடப்புத்தகங்களையும் குறி வைக்கின்றனது. தொடக்கப்பள்ளிக் குழந்தைகளுக்கான புதிய பாடப்புத்தகங்களில் கூட மூடப்பழக்கவழக்க கருத்துக்கள், தவறான தகவல்கள், பண்டைய இந்தியாவின் பெருமை என்று கேலிக்கூத்தான விஷயங்கள் உள்ளிட்ட பல அம்சங்களை சேர்த்து வருகின்றனர். இந்துக் கடவுள் விநாயகரின் யானைத் தலை என்பது இந்தியர்களுக்கு முன்பே பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை தெரியும் என்று இந்திய நாட்டின் பாஜக பிரதமரே கூறுகிறார். அவர்கள் கூறும் இதுபோன்ற எல்லா கேலிக்கூத்தான கருத்துக்களையும் இங்கே அளிப்பது கால விரையமாகிவிடும். ஆனாலும் கூட அதில் ஒன்றிரண்டைப் பார்க்கலாம். நாம் மேலே குறிப்பிட்டபடி குழந்தைகளுக்கான தினாநத் பத்ராவின் புத்தகத்தில், மகாபாரதத்தில் 100 கௌரவர்கள் பிறந்த செய்தியிலிருந்து சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியர்களுக்கு மரபணு ஆராய்ச்சி பற்றி தெரிந்திருந்ததை நிரூபிக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. இதற்கும் கல்வியாளர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நாடு முழுவதும் தங்களது கண்டனத்தைப் பதிவு செய்தனர்.

சில அடிப்படைக் கண்டுபிடிப்புகள் உள்ளிட்ட நவீன விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகள் அனைத்துமே புராதன இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டவை என்ற உரிமை கோரல்கள் அல்லது இந்துக் கடவுளான சிவன்தான் தலைசிறந்த சுற்றுச்சூழலியல் அறிஞர் என்ற கூற்றுக்கள் போன்ற விஞ்ஞானத்திற்கு எதிரான மற்றும் போலி விஞ்ஞானக் கருத்துக்களை அனுமதித்ததன்மூலம் இந்திய மற்றும் சர்வதேச விஞ்ஞானிகளுக்கான மேடையாகக் கருதப்படும் இந்திய விஞ்ஞான மாநாடும் கூட தரம் தாழ்த்தப்பட்டுவிட்டது. சமஸ்கிருதத் துறையில் பணியாற்றுபவர்களிடமிருந்து அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள் கேட்கப்படுகின்றன. இந்த எழுத்தாளர்களில் ஒருவர் கூட சீரிய விஞ்ஞான ஆய்வில் அல்லது எந்தவொரு அறிவியல் மேதைமைபெற்ற விஞ்ஞானிகளாவோ இல்லை. ஆனாலும் கூட இந்த தங்களுக்கே உரிய நடையில் எழுது இந்தக் கட்டுரையாளர்கள் கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் மிகவும் முன்னேறிய விமானங்கள் வேத காலத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன என்றும் மகாபாரதக் கதை என்பது பூமியைத் தாண்டி நிலா மற்றும் செவ்வாய் கிரகத்திலும் நடைபெற்றது என்றும் கூறக்கூடிய அளவுக்கு சென்றுவிட்டனர். விமானங்களின் மூலமாக அங்கே வீரர்கள் சென்றதாக அவர்கள் கூறுகின்றனர். 'ஐன்ஸ்டீனைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், ஒருவர் வேதங்களைப் படிக்க வேண்டும்' என்று பல கருத்துக்களை அவர்கள் தெரிவிக்கின்றனர். புராதன இந்தியா பற்றிய இது போன்ற போலிப் பெருமை கொள்ளுதல் நமது நாட்டு மற்றும் வெளிநாட்டு விஞ்ஞானிகள் மற்றும் கல்வியாளர்களின் கண்டனத்திற்கும் விமர்சனத்திற்கும் ஆளாகியுள்ளது. ஆனால் அதற்கெல்லாம் ஆர்எஸ்எஸ்–பாஜக கூட்டு கவலைப்படவில்லை. ஆகஸ்டு 2014இல், உச்சநீதிபதி ஒருவர் தமக்கு வாய்ப்பு கிடைத்தால் 1ஆம் வகுப்பு முதலே பகவத் கீதையையும் மகாபாரதத்தையும் படிப்பதற்கு அறிமுகம் செய்வேன் என்று கூறுகிறார். பகவத் கீதை பற்றி கொஞ்சம் அறிவை வழங்க உள்ளதாக இந்திய மேலாண்மை நிறுவனம்–ஐஐஎம் (இந்தூர்) தெரிவிக்கிறது. கிருஷ்ணர் விழிப்புணர்விக்கான சர்வதேச சமூகம் (இஸ்கான்) அமைப்பைச் சேர்ந்த ஐஐஎம்மின் பேராசிரியர் ஒருவர் மேலாண்மை மாணவர்களுக்கு தொழிலிலும் தினசரி தனிப்பட்ட வாழ்க்கையிலும் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிப்பதற்கு நன்கறியப்பட்ட இந்த காவியம் உதவும் என்று ஆலோசனை கூறுகிறார். செப்டம்பர் 2015இல் கலாச்சாரத்திற்கான மத்திய இணை அமைச்சர் பேசுகையில் மகாபாரதம், ராமாயணம் மற்றும் கீதையை விரைவில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் போதிப்பதற்கு கலாச்சாரம் மற்றும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகங்கள் முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஹரியானா மாநிலத்தை ஆளும் அம் மாநில பாஜக அரசாங்கம் மகாபாரதப் போரான குருக்ஷேத்திரம் நடைபெற்ற புண்ணிய பூமி என்று கூறி அங்கே தொடக்கப்பள்ளிகளில் 2015–16 முதல் பின்னர் பல்கலைக்கழகங்களிலும் கீதையை படிப்பதற்காக அறிமுகப்படுத்தப் போவதாக முடிவு செய்துள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக, வெகுஜனங்களின் மனதில் ஊடுருவுவதற்காகவும், குழந்தைகளின் இளம் மனதில் தங்களது நச்சு காவிமயமமாக்கும் சிந்தனைகளையும், உணவுகளையும் நடைமுறைகளையும் பதிப்பதற்காக ஆர்எஸ்எஸ்–பாஜக கூட்டு எங்கெல்லாம் அதிகாரத்தில் இருக்கிறார்களோ அங்கெல்லாம் சரஸ்வதி பூஜை, போஜன் மந்திரம், ஹாவன் போன்ற இந்து மத சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் அங்குள்ள அனைத்துக் கல்வி நிலையங்களிலும் கட்டாயமாக்க உத்தரவிட்டு அங்குள்ள வேற்று மத மாணவ மாணவியர்களையும் தொடக்கக் கல்வி முதலே இச்சடங்குகளைப் பின்பற்ற நிர்ப்பந்திக்கின்றனர்.

எனவே இந்தியமயமாக்கல் அல்லது இந்துமயமாக்கல் என்பது அமைதியாக நடைபெறக்கூடிய ஒன்றல்ல. மறைமுகமான நடவடிக்கைகள், நயவஞ்சக தந்திரங்கள் அதோடு அதற்கும் மேலாக பட்வா எனப்படும் மதவாதக் கட்டளைகள் போன்றவற்றை அரங்கேற்றுகின்றனர். அதோடு கூடவே மேலும் மோசமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. உதாரணத்திற்கு, தேசிய அரசியலுக்கு இன்றைய பிரதமர் வருவதற்கான முகவரியாகத் திகழ்ந்த குஜராத்தில் திரு தினாநத் பத்ராவின் புத்தகங்களைப் போதிக்கும் அம்மாநில பாடப்புத்தக வாரியம் வெளியிட்ட சமூக அறிவியல் பாடப்புத்தகங்களின் ஆசிரியர்கள் இந்திய சுதந்திரப் போராட்டதை குறை கூறுவதோடு, பாசிசத்தையும் நாசிசத்தையும் போற்றிப் புகழ்கின்றனர். ஆர்எஸ்எஸ்ஸின் நிறுவனர்களும் அதே கருத்தைக் கொண்டிருந்ததால் இது ஒன்றும் ஆச்சர்யமூட்டவில்லை. காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தின் 'எதிர்மறை அம்சங்களை' எட்டாம் வகுப்பு மாணவர்களுக்குப் போதிக்கும் அதே வேளையில் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு 'ஹிட்லர், பெருந்தலைவர்' அதோடு 'நாசிசத்தின் உள்நாட்டு சாதனைகள்' போன்ற பாடத்தலைப்புகளில் இடம் பெற்றுள்ள பாடங்கள் பாசிசத்தையும் நாசிசத்தையும் அபாயகரமாக உயர்த்திப்பிடிக்கின்றன.

பாடப்புத்தகங்களை தான் கட்டுப்படுத்திவிட்டால் ஒட்டுமொத்த தேசத்தையும் நான் கட்டுப்படுத்தி விடுவேன் என்று ஒருகாலத்தில் ஹிட்லர் கூறிய கருத்தால் ஆர்எஸ்எஸ்–பாஜக சித்தாந்தவாதிகளும் ஊழியர்களும் உத்வேகமடைந்துள்ளனர் என்பது போல் தெரிகிறது. கல்விக் களத்தை தனது பாசிச நிர்வாகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட்டால், நாட்டு மக்களின் சிந்திக்கும் விதத்தைய கட்டுப்படுத்துவதும், சிந்தனைப் போக்கை படைமுறைப்படுத்துவதும் (Regimentation), குருட்டு நம்பிக்கை, இன வெறிவாதம், இன ஆதிக்கவாதம் ஆகியவற்றின் கலவைகளாக எண்ணங்களை மாற்றி அதன்மூலம் சமுதாயத்தை பாசிசமயமாக்கும் செயல் முறைப் போக்கை சாதிப்பது அவருக்கு எளிதாக இருக்கும் என்பதே இதன் பொருளாகும்.

எனவே இந்த நாட்டு மாணவர்கள் இத்தகைய விழுமியங்களைப் பெறவேண்டும் என்று ஆர்எஸ்எஸ்–பாஜக இணை விரும்புகிறது. இவை எல்லாம் கல்வியில் உள்ள தவறுகளையும் தீமைகளையும் நீக்குகிறோம் என்ற பெயரில் வருகின்றன. இவை எல்லாம் கல்வி அமைப்பையே புதை குழியில்

தொடர்ச்சி 7ம் பக்கம்

# பாசிச அபாயம் பெருகிவருவதை முன்கூட்டித் தடுக்க கல்வியின் மீதான தாக்குதல்களை எதிர்த்திடுவீர்

6ம் பக்கத் தொடர்ச்சி

தள்ளுவதற்கான கடுமையான தாக்குதல்கள் இல்லை என்றால், வேறு எதைச் சொல்லமுடியும்!

### ஆர்எஸ்எஸ்–பாஜக திட்டம்: எதிர்ப்பை முறியடிக்க கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி மீது இடைவிடாது தாக்குதல் நடத்துதல்

ஆனால் இந்தத் தாக்குதல்கள் இதோடு நிற்கவில்லை. இவற்றைக் கொண்டுவரும் போது ஒவ்வொரு படியிலும் விமர்சனங்களையும் எதிர்ப்பையும் தாங்கள் சந்திக்க வேண்டும் என்று தாக்குபவர்கள் அறிவர். எனவே தங்களது திட்டத்தை இலகுவாக அமல்படுத்துவதற்கு தங்குதடையற்ற பாதையை விரும்புகின்றனர். அவர்களது இயற்கையான குணத்திற்கு ஏற்ற பாதையை அவர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். என்சிஇஆர்டி (தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அமைப்பு), ஐசிஹெச்ஆர் (இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சில், அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட வரலாற்றை உறுதிப்படுத்துவதற்கும் வரலாற்று ஆராய்ச்சியை நடத்துவதற்குமான பொறுப்பு வழங்கப்பட்டுள்ள அமைப்பு), ஐசிஎஸ்எஸ்ஆர் (சமூக விஞ்ஞான ஆராய்ச்சிக்கான தேசிய கவுன்சில்) இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனம் (ASI) இன்னும் இதுபோன்ற கலாச்சாரம், வரலாறு போன்ற தேசியக் கொள்கை வகுக்கும் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளில் இன்னபிற கல்வியின் அனைத்து மட்டங்களிலும் ஆர்எஸ்எஸ் விசுவாசிகளை தலைமை உள்ளிட்ட மிக முக்கியமான பொறுப்புகளில் அமர்த்தி வருகின்றனர்.

இந்தியா மற்றும் உலகின் தலைசிறந்த வரலாற்று அறிஞர்கள் 21 பேர் அடங்கிய ஐசிஹெச்ஆர்யின் பத்திரிகையின் ஆலோசனைக் கமிட்டியை அவர்கள் கலைத்து விட்டனர். டிஎன் பத்ரா எழுதிய வரலாற்றுபூர்வமாக சரியாக அல்லாத மற்றும் முற்றிலும் தவறான கருத்துக்களைக் கொண்ட புத்தகத்தை குஜராத் மாநிலத்தின் இடைநிலைப் பள்ளிகளில் பாடமாக பரிந்துரைக்கப்பட்டதற்கு இந்த பகுத்தறிவு எண்ணம் கொண்ட வரலாற்று அறிஞர்கள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர். எனவே அவர்களை நீக்கிவிட்டு அவ்விடத்தில் வரலாற்றில் குறைந்த ஞானம் அல்லது ஞானமே இல்லாத ஆர்எஸ்எஸ் விசுவாசிகளை நியமிக்க முடிவு செய்துள்ளனர். இது இத்தோடு நிறைவடையவில்லை.

மாற்றி அமைக்கப்பட்டுள்ள ஐசிஹெச்ஆர் நிதி உதவி விதிகள் திருத்தப்பட்டுள்ளன, 1972 முதல் நடந்துவரும் இந்திய வரலாற்று மாநாட்டிற்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்துள்ளதோடு, அதன் வருடாந்திரக் கூட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் நடத்துவதற்காக ஐஹெச்சி–க்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவியை, அடுத்த கூட்டம் நடக்க உள்ள கடைசி நிமிடத்தில் ரத்து செய்துவிட்டனர். பண்டைய இந்தியாவில் பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை இருந்தது என்ற பிரதமர் நரேந்திர மோடியின் கருத்துக்கு கடந்த ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் விமர்சனம் எழுந்ததோடு ‘கதைகளையும் வரலாற்றையும் சேர்ப்பதற்கு’ எதிராக எச்சரிக்கை எழுப்பும் வண்ணம் டில்லியில் நடைபெற்ற அதன் இறுதி அமர்வில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இதன் எதிர் நடவடிக்கையாகவே இந்த நிதி உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அதேபோன்று திறமையான நிர்வாகம் என்ற பெயரில் இந்திய மேலாண்மை நிறுவனத்தைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஐஐஎம்மின் கவர்னர்கள் குழுவுக்கு இருந்துவந்த முழு தன்னாட்சி அதிகாரத்திற்கு மேலாக அதன் கொள்கை குறித்த கேள்விகளில் மத்திய அரசாங்கம் எடுக்கும் முடிவுகளே இறுதியானது என்று திருத்தியுள்ளனர்.

மேலே குறிப்பிட்ட சில சம்பவங்களிலிருந்து தங்களது திட்டங்களை சிரமமின்றி தடையில்லாமல் நிறைவேற்றுவதற்கு வசதியாக ஆர்எஸ்எஸ்–பாஜகவும் அவர்களது தலைமையில் நடைபெறும் மத்திய அரசாங்கமும் கல்வி மற்றும் கலாச்சார நிறுவனங்களின் தன்னாட்சி அதிகாரத்தை தடுத்து வருவதை எடுத்துக்காட்டுகின்றன.

### இந்தத் தாக்குதல்கள் கல்வியோடு நிற்கவில்லை, அவை ஒட்டுமொத்த சாமானிய மக்கள் மீதும் தான்

கல்வியின் மீது தொடுக்கப்பட்டுள்ள இந்த ஒட்டுமொத்தத் தாக்குதலால் நமது நாட்டின் கல்வி அமைப்பு மோசமான இருளைநோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதை மேலே சொன்ன சுருக்கமான விவரங்களே சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கின்றன. கடந்த ஆட்சியில் பின்பற்றப்பட்ட அதே மோசமான கொள்கைகள் தொடர்கின்றன. சாமானிய மாணவர்களுக்கான ஓரளவிற்கு தரமான கல்விகூட நாளுக்குநாள் சுருங்கிவருகிறது. தடையில்லாத் தேர்ச்சி என்றால் படிக்க வேண்டியதில்லை என்பதால் அது கற்பித்தல்–கற்றல் செயல்முறைப் போக்குகளின் தரத்தை கடுமையாகப் பாதித்துவிட்டது. எனவே பாஸ்–பெயில் முறை நீக்கத்தை கல்வியோடு தொடர்புடைய மக்கள் அனைவரும் கடுமையாகக் கண்டித்தபோதிலும் அதை இன்னமும் மீண்டும் அறிமுகப்படுத்தவில்லை.

அபரிமிதமாக கல்வி தனியார்மயம்–வியாபாரமயமாகிவருவதைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், புதிதாக முன்மொழியப்பட்டுள்ள தேசியக் கல்விக் கொள்கை வரைவு ஆவணம் ஒரு கேள்வி எழுப்பியுள்ளது: நபர் ஒன்றுக்கு ரூ2000க்கும் மேல் செலவு ஆவதால், தேவைப்படுபவர்களுக்கு மட்டும் கட்டணவிலக்கு அளித்துவிட்டு கல்விக் கட்டணத்தை ரூ500 அதிகப்படுத்தலாமா? இதன் பொருள் கல்விக்கட்டணத்தை கடுமையாக உயர்த்தப்போகிறார்கள் என்பதே ஆகும். கல்வியை சந்தை சார்பு தொழிற்கல்விமயமாக்கல் ஆக்குவதற்கு அழுத்தம் அல்லது உலக சந்தைக்கு ஏற்றவகையில் திறன் வளர்ப்பு என்ற புதிய கோஷங்கள் கற்றல் அணுகுமுறையில் கடுமையான வியாபாரமயமாக்கலையே முன்னிறுத்தும். அனைவருக்கும் நீடித்த உயிரோட்டமான மற்றும் நல்ல கல்வி அமைப்பை வழங்குவதற்கான தங்களது நிதி ஆதரவை அரசாங்கங்கள் வேகமாக திரும்பப்பெற்று வருகின்றன. கொள்கை ஆவணங்களும் இந்த பார்வையை மறைமுகமாகவோ அல்லது திரிபு வடிவிலோ எடுத்துரைக்கின்றன. அதோடு எல்லாவற்றிற்கும் மேலாக கல்வியை வேகமாகக் காவிமயமாக்க முயற்சிப்பது நாட்டின் மதச்சார்பற்ற விஞ்ஞானபூர்வ கல்வியின் குறைந்தபட்ச கட்டமைப்பையும் தகர்க்கிறது.

சுருங்கக்கூறின், அப்பட்டமான மதவெறி சிந்தனைகள், லாப–நோக்கு வியாபாரமயமாக்கல், திரித்தல் என்பதே கருத்தும் அணுகுமுறையுமாகவும் ஏமாற்றுதல் என்பது திரைமறைவு திட்டமாகவும், இந்த அணுகுமுறையை எதிர்ப்பவர்கள் மீதும் அதே போன்று மத சிறுபான்மை சமூகத்தின்மீதும் சகிப்பின்மையையும் கிளப்பிவிடுவது என்ற கொடிய சூழல் நிலவிவருகிறது. ஒட்டுமொத்த எதேச்சதிகாரப் போக்கு எங்கும் வியாபித்திருகிறது. கல்வியின் சாரம் காற்றோடு கரைந்துவரும் அதே வேளையில் மேலே சொன்ன சூழலும் சேர்ந்து ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையேயான பாரம்பரிய நல்லுறவுகளும் நாசமாகிவருகிறது. ஆளும் கட்சியை, அவர்கள் மத்திய பாஜகவானாலும் அல்லது மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரசானாலும் சரி, அக்கட்சிகளை சேர்ந்த மாணவர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய கருத்துக்களை எதிர்க்கும் ஆசிரியர்களைத் தாக்குவதற்கும் கூட தயங்குவதில்லை, சில ஆசிரியர்களோ மாணவியரின் வாழ்க்கையைக் கெடுத்துவிடுவோம் என்று கூறி அவர்களை பாலியல் வன்கொடுமை செய்யவும் தயங்கவில்லை. இவற்றிற்கெல்லாம் தீர்வு காண்பதை சிந்திக்க வேண்டிய அரசாங்கம் மாறாக வசதி படைத்தோருக்கு, ஒருவருக்கொருவர் நேரடித் தொடர்பில்லாத, ஆசிரியருக்கும் கற்பித்தலுக்கும் தனிப்பட்ட தொடர்பு ஏதுமில்லாத உயர் தொழில்நுட்ப, டிஜிட்டல்மயக் கல்வி வழங்குவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழலில் இதுபோன்ற அணுகுமுறை சூழ்நிலைமையை மேலும் நாசப்படுத்திவிடும். இந்த நாசகாரத் திட்டங்களுக்கு எதிராகவும் அவர்களது கொள்கைகளை அமல்படுத்துவதற்கும் எழக்கூடிய எவ்வித எதிர்ப்பையும் முறியடிப்பதற்காக இதைப் பயன்படுத்திக் கொண்டு, அரசாங்கங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கல்வி நிறுவனங்களின் தன்னாட்சியைத் தடுப்பதோடு அதிகாரத்தை தங்கள் வசம் குவித்துவருகின்றன.

இதன் விளைவு தற்போது உடனடியாகவும் நீண்ட காலத்திற்கும் மோசமான நிலையை ஏற்படுத்தும். அனைவருக்கும் கல்வி உலக மேற்பார்வை அறிக்கை 2010 (யுனெஸ்கோ) இன்படி 128 நாடுகளில் இந்தியா 105வது இடத்தில் உள்ளது. 2001லும் கூட 127 நாடுகளில் இந்தியா இதே 105வது இடத்தில்தான் இருந்தது. தொடர்ந்து அதே இடத்தில் இருந்துவருகிறது. ஆப்பிரிக்க நாடுகள், பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற ஒன்றிரண்டு ஆசிய நாடுகள் மட்டும் தான் கல்வி வளர்ச்சிக் குறியீட்டில் இந்தியாவிற்கும் கீழே உள்ளன. இவை எல்லாம் இந்தியாவின் பொருளாதாரத்தைக் காட்டிலும் மிகவும் பின்தங்கியவை என்பது குறிப்பிடத்தக்கது. 2012இல் சர்வதேச மாணவர்களை மதிப்பீடு செய்வதற்கான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான நிர்வாககுழுத் திட்டம் ஆய்வு செய்ததில் 73 நாடுகளில் இந்தியா 72வது இடத்தில் இருந்தது, இந்தியாவிற்கு அடுத்தபடியாக கைர்கிஸ்தான் மட்டுமே உள்ளது. 15 வயதினரில் ‘வாசித்தல், கணித அறிவு மற்றும் அறிவியல் அறிவு’ பற்றிய சர்வதேச அளவில் ஒப்பீட்டு ஆய்விற்காக நடத்தப்பட்ட 2 மணி நேரத் தேர்வில் இந்திய மாணவர்கள் மிகவும் பின்தங்கி இருந்தனர். (2011 இல் 74 நாடுகளில் இந்தியா 73வது இடத்தில் இருந்தது.)

இத்தகைய மோசமான வடிவில் ஒட்டுமொத்த சூழலும் நீண்டகாலம் நடந்தால், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அல்லது கல்வியோடு தொடர்புடையவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் ஒழுக்கநெறி முதுகெலும்புதான் மிகப்பெரிய அளவில் தகர்க்கப்படும். எனவே இந்த சூழல் கல்வியோடு தொடர்புடையவர்கள் மட்டும் கவலைகொள்ள வேண்டிய ஒன்றல்ல. இந்த நாட்டு மக்கள் சந்திக்க வேண்டிய மிகப் பெரிய பேரழிவாகும். எதிர்கால சந்ததியின் ஒழுக்கநெறி முதுகெலும்பு நொறுக்கப்படுமானால் அது பாசிசம் வளர்வதற்கான விளை காடாக மாறிவிடும். அதன் பின்னர், ஹிட்லர் உருவாக்கியதைப் போன்று, பாசிசமும் நாசிசமும் ஒரு மாநிலத்தில் உருவாகி, அதன் அசிங்கமான தலையை ஒட்டுமொத்த தேசத்திற்கும் விரிவுபடுத்தி பல தலைமுறை பின்பற்றி பாழ்பட்டு அழிந்துபோகும். நம் கண் முன்னால் இருக்கும் இத்தகைய அறிகுறிகளை ஜனநாயக எண்ணம் கொண்ட ஒவ்வொரு மனிதரும் உணர்ந்து அந்த அபாயத்தை எதிர்த்து முறியடிப்பதற்கு முன்வரவேண்டும்.

### ஜனவரி 21 : பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் லெனின் அவர்களின் 92வது நினைவுத் தினக்கூட்டம் சென்னையில் நடைபெற்றது



Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication 2nd March 2016

புரட்சி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

# ஜனவரி 23 : மாபெரும் புரட்சியாளர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் 119வது பிறந்ததினம்

ஜனவரி 23, மாபெரும் புரட்சியாளர் நேதாஜி அவர்களின் 119வது பிறந்ததினம். மாநிலத்தின் பல இடங்களில் நேதாஜியின் பொன்மொழிகள், புகைப் படங்கள் அடங்கிய கண்காட்சிகளையும் விவாதக் கூட்டங்களையும் எமது வெகுஜன அமைப்புகளான அகில இந்திய ஜனநாயக மணவர் சங்கமும் (AIDSO), அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கமும் (AIDYO) அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கமும் (AIMSS) இணைந்து நடத்தின.

சென்னையில் 23 அன்று பக்தவச்சலம் காலனி யில் உள்ள நேதாஜி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். மதுரையிலும் ஜான்சிராணி பூங்காவில் உள்ள நேதாஜி சிலைக்கு மலர்மாலை அணுவித்த னர். சென்னையில் வியாசர்பாடியில் குரு சந்திரா மஹாலில் பொதுக்கூடமும் கண்காட்சியும் நடைபெற்றது.

நெய்வேலி, மந்தாரக்குப்பத்தில் நேதாஜியைப் பொன்மொழிக்காட்சி வைக்கப்பட்டது. புதுக் கோட்டை மாவட்டத்தில் மீமிசலிலும் நேதாஜியின் உருவப்படம் வைத்து விவாதக் கூட்டம் நடை பெற்றது. தேனியில் அல்லிநகரத்தில் இதே போன்ற கண்காட்சி வைக்கப்பட்டது. ஜனவரி 24 அன்று வத்தலகுண்டு காமகா பட்டியில் நேதாஜியின் உருவப்படத்தையும் பொன்மொழிகளையும் ஏந்தி பேரணி நடைபெற்றது. ஊர்வலத்தின் இறுதியில் மேடை அமைத்து பாடல்கள், நாடகம், நடனம், ஊமை (மைம்) நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. ஜனவரி 26 அன்று மாலை மதுரையின் புறநகர் பகுதியான பரவையில் பொன்மொழி–புகைப்படக் கண்காட்சியை அமைத் தனர். சென்னையில் கொருக்குப்பேட்டையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்த வாரம் (ஜன 23–30) முழுவதும் சைதாப்பேட்டை, மேற்கு மாம்பலம், புளியந்தோப்பு ஆகிய பகுதிகளில் பொன்மொழிக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. பக்தவச்சலம் காலனியில் 24 அன்று மாலை 'நேதாஜி மறக்கப் பட்ட நாயகன்' திரைப்படம் திரையிடப்பட்டது.



மதுரை


பரவை - மதுரை மாவட்டம்


கோட்டூர் - தேனி மாவட்டம்


காமகாப்பட்டி - திண்டுக்கல்


நெய்வேலி


பக்தவச்சலம் காலனி - சென்னை


கொருக்குப்பேட்டை - சென்னை


சைதாப்பேட்டை - சென்னை



மேற்கு மாம்பலம் - சென்னை


வியாசர்பாடி - சென்னை

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucicommunist.org